விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 233 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 24 சனிக்கிழமை (09.08.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## வடக்கு மாகாணத்தைக் கட்டியெழுப்ப அனைத்து வேலைகளும் முன்னெடுக்கப்படுகின்றன

### அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தைக் கட்டியெழுப்ப அனைத்து வேலைகளும் முன்னெடுக்கப்படுகின்றன என கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம்உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

"கடந்த காலங்களில் வடக்குக்கு எதிராக அநீதிகளே கட்டவிழ்த்துவிடப்பட்டன. அதனால்தான் போர்கூட ஏற்பட்டது. எனினும், வடக்கைக் கட்டியெழுப்புவதற்குரிய அனைத்து வேலைத் திட்டங்களும் தேசிய மக்கள் சக்தி ஆட்சியின்

15ஆம் பக்கம் பார்க்க



## யாழ்.புல்லுக் குளத்தில்

### இனந்தெரியாத நபரின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்துக்கு அருகிலுள்ள புல்லுக்குளத்திலிருந்து இனந்தெரியாத ஆணொருவரின் சடலம்

15ஆம் பக்கம் பார்க்க

## புத்தூரில் விபத்து; இளைஞன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

புத்தூர்ச் சந்தியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் ஆவரங்கால் மேற்கு புத்தூரைச் சேர்ந்த பரிஸ்ணன் அஜய் (வயது-20) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

15ஆம் பக்கம் பார்க்க


## தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கும் நோக்கம் அநுர அரசிடம் இல்லை

### சிறீதரன் எம்.பி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யும் நோக்கம் அநுர அரசிடம் இல்லை என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)



## இலங்கையில் முதலிட முன்வாருங்கள்

### அவுஸ்திரேலிய ஆளுநரிடம் அநுர



02ஆம் பக்கம் பார்க்க

## - உலக வங்கியின் உதவியுடன் -

## வட மாகாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் தொடர்பில் ஆராய்வு



(யாழ்ப்பாணம்)

உலக வங்கியின் உதவியுடன் வடக்கில் முன்னெடுப்பதற்கு அடை

15ஆம் பக்கம் பார்க்க



## யாழ்.போதனா வைத்தியசாலையில்

## கிருமித் தொற்றுக் காரணமாக 16 வயது மாணவி மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் கிருமித் தொற்றுக் காரணமாக 16 வயது மாணவி ஒருவர் மரணமடைந்துள்ளார்.

இதில் அச்சுவேலி சரஸ்வதி மகா வித்தியாலயத்தில் தரம் 11இல் கல்வி பயிலும் சந்திரானந்தன் வர்ணயா (வயது-16) என்ற மாணவியே

15ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையில் ஒவ்வொரு ஆண்டும் 20 ஆயிரம் மாணவர்கள் பாடசாலையிலிருந்து விலகல்

### பிரதமர் ஹரிணி அமரசூரிய

(கொழும்பு)

இலங்கையில் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 20 ஆயிரம் மாணவர்கள் பாடசாலை

02ஆம் பக்கம் பார்க்க



## ரூ.1,484 மில்லியன் விவசாயிகளுக்கு இழப்பீடு

(கொழும்பு)

பெரும்போகத்தில் நெல், சோளம், பெரிய வெங்காயம்,

15ஆம் பக்கம் பார்க்க

## முல்லைத்தீவு கொக்குத்தொடுவாயில்

## கடற்றொழிலுக்குச் சென்ற இளைஞன் கொலை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாயில் கடற்றொழிலுக்குச் சென்ற இளைஞன் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இதில் கொக்குத்தொடுவாய் வடக்கைச் சேர்ந்த ஜெயராஜ் சுபராஜ் (வயது-21) என்ற இளைஞனே கொலை

02ஆம் பக்கம் பார்க்க



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20 ஆயிரம் ...

யிலிருந்து இடைவிலகுவதாகப் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்தின் இல்லத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கல்வி சீர்திருத்தங்கள் குறித்த கலந்துரையாடலின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

கல்வி அமைச்சால் நடத்தப்பட்ட ஆய்வில் இலங்கையில் ஆண்டுதோறும் சுமார் 20 ஆயிரம் மாணவர்கள் பாடசாலையை விட்டு இடைவிலகுவதாகவும் ஆண்டுதோறும் சுமார் 3 இலட்சம் பிள்ளைகள் பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்பட்டாலும் அவர்களில் ஒரு பகுதியினர் மட்டுமே பல்கலைக்கழகத்துக்குச் செல்வதாகவும் இன்னும் சிலர் உயர் கல்விக்காக வெளிநாடு செல்வதாகவும் தெரிவித்தார்.

இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நாங்கள் முயற்சி செய்வதாகவும் பிரதமர் ஹரிணி அமரசூரிய சுட்டிக்காட்டினார். (ம-7)

## வடமராட்சி வடக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் (வ/து) - பருத்தித்துறை

பதிவு இலக்கம் : J/ 2064 - 11.09.1989

### காணி விற்பனை தொடர்பான அறிவித்தல்

சங்கத்திற்குச் சொந்தமானதும் புலோலி வடமேற்கு கிராம சேவை அலுவலர் பிரிவில் "கட்டுமந்துவில்" என்னும் பெயரில் உள்ளதுமான 03 பரப்பு 5.12 குளி பரப்பளவு கொண்ட காணியானது (மந்திகை அம்மன் கோவில் வடக்குப் பக்கம்) விற்பனை செய்யப்படவுள்ளது.

1. மூடிய கேள்விக்கோரல் முறையில் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.
2. ஒருவர் தனது பெயரில் ஒரு விண்ணப்பத்தினை மாத்திரம் பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாக சமர்ப்பிக்க முடியும்.
3. விண்ணப்பிக்கும் முகவரி : தலைவர், வடமராட்சி வடக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், சிலையடி, பருத்தித்துறை.
4. விண்ணப்ப இறுதித்திகதி : 23.08.2025

மேலதிக தகவல்களுக்கு

(C-3607)

**077 952 7525, 077 086 6371**

## மரண அறிவித்தல்

பிறப்பு 31 - 03 - 1936



இறப்பு 08 - 08 - 2025

### இரத்தினேஸ்வரஐயர் பகவதியம்மா

கீரிமலையைப் பிறப்பிடமாகவும் பன்னாலையை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினேஸ்வரஐயர் பகவதியம்மா நேற்று (08.08.2025) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் சபாரத்தினக்குருக்கள் - கோமதிஅம்மா தம்பதியினரின் அன்பு மகளும் குகானந்தசர்மா - செல்லம்மா அவர்களின் அன்பு மருமகளும் இரத்தினேஸ்வரஐயர் அவர்களின் அன்பு மனைவியும் ஜலஜா, விஜயா, சுகல்யா, சௌமியா, பிரதாபசர்மா (R.P.சர்மா), நீரஜா அவர்களின் அன்புத் தாயாரும் வாகீஸ்வரக்குருக்கள் (ஊரெழு), கதிர்காம நாதக்குருக்கள் (கொழும்பு), அமரர் அகிலேஸ்வரக்குருக்கள் (தெல்லிப்பளை), செந்தில்ராஜக்குருக்கள் (பிரதமகுரு - துர்க்கா தேவஸ்தானம், தெல்லிப்பளை), உஷா (வடலியடைப்பு), மாதவராஜசர்மா (வேலணை) ஆகியோரின் அன்பு மாமியும் வித்தியாதரக்குருக்கள் - கார்த்திகா, சிவானுஜா, ஆரணி, ரோகிணி - பிரேம தீபன், ஜனனி - ஜெகதீஸ்வரசர்மா, வினோதினி, கிருபாகரசர்மா, அமிர்தினி, கோபிகிருஷ்ணா - ஷோபனா, லலிதாதாஸ்(சட்டத்தரணி) - மஞ்சுரி, பிருகஸ்பதி, வாசவி, மதுவந்தி, சுவஸ்திகசர்மா மற்றும் அமிர்தவர்ஷினி ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் நித்தியஸ்ரீ, சந்தோஷி, பத்தவத்சலன், ஆயுஸ்ஜன், அபிஷான், அபிஷேக்சர்மா, ஸ்ரீகரி, ஷைனிகா, ஆதித்ரீ மற்றும் அனுத்தமன் அவர்களின் அன்புப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று 08.08.2025 வெள்ளிக்கிழமை மாலை 05.00 மணியளவில் எட்டாம் கட்டை தெல்லிப்பளையிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று கீரிமலை செம்பொன் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதனை ஆழ்ந்த துயரத்துடன் அறியத்தருகின்றோம். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஆழ்ந்த துயரில் குடும்பத்தினர்
077 823 8527, 076 341 1931

(C-3608)

## விடுவிக்கும் ...

பாராளுமன்றத்தில் நீதி அமைச்சர் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

கடந்த மாதம் 23ம் திகதி பாராளுமன்ற குழுத்தலைவர் என்ற ரீதியில் பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்கும் சபாநாயகருக்கும் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு மற்றும் நிலஅபகரிப்பு, மனிதப் புதைகுழிகள் தொடர்பான விடயங்கள் பேசுவதற்கான கோரிக்கையை முன்வைத்திருந்தேன். அதற்காக சந்தர்ப்பம் 22ம் திகதி வெள்ளிக்கிழமை கிடைத்துள்ளது.

குறித்த ஒரு நாள் விவாதத்தில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு உள்ளிட்ட மனிதப் புதைகுழிகளுக்கான சர்வதேச விசாரணை, காணிகள் அபகரிப்பு உள்ளிட்ட விடயங்களை வலியுறுத்தவுள்ளோம் எனத் தெரிவித்தார்.

தொடர்ந்து மன்னார் காற்றாலை தொடர்பான அமைச்சர் தொடர்பிலான சந்திப்பு மற்றும் அரசியல் கைதிகள் விடுவிப்பு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதியிடம் பேசுவதற்கான சந்தர்ப்பத்தைக் கேட்டுக் கடிதம் அனுப்பியுள்ளதாகவும் தெரிவித்தார். (ம-7)

## இலங்கையில் ...

இலங்கையில் முதலிட அவுஸ்திரேலியா முன்வர வேண்டும் என அவுஸ்திரேலியா ஆளுநரிடம் ஜனாதிபதி அநுர கோரிக்கை முன்வைத்துள்ளார்.

நாட்டிற்கு வருகை தந்துள்ள அவுஸ்திரேலிய ஆளுநர் நாயகம் சமந்தா ஜோய் மோஸ்டினுக்கும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்குமான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் (07) பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது அவுஸ்திரேலியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான 75 ஆண்டுகளுக்கும் மேலான நட்பை மேலும் வலுப்படுத்தல் மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதாரம், கல்வி, பாதுகாப்பு, சுற்றுலா மற்றும் கடல்சார் விவகாரங்களில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் நாட்டின் பொருளாதாரம் தற்போது நிலையானதாகவும் வலுவாகவும் இருப்பதால் முதலீட்டிற்கு மிகவும் சாதகமான சூழல் உருவாக்கப்பட்டுள்ளது என்றும் அவுஸ்திரேலிய முதலீட்டாளர்களை நாட்டில் முதலீடு செய்ய அழைப்பு விடுப்பதாகவும் ஜனாதிபதி இங்கு மேலும் குறிப்பிட்டார். (ம-7)

## கடற்றொழி ...

செய்யப்பட்டவராவார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை தொழிலுக்கு சென்ற குறித்த இளைஞன் கொக்கு தொடுவாய் களப்புக் கடலில் இருந்து சுமார் 50மீற்றர் தூரத்தில் படுகொலை செய்யப்பட்டு சடமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் சடலத்தை பார்வையிட்டதோடு மோப்பநாயின் உதவியுடன் விசாரனை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியதோடு சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ம-7,299)

## 36 வது பிறந்தநாள் நினைவலைகள்

### திரு.விக்னேஸ்வரன் விஷாந்



தோற்றம் 09.08.1989 | மறைவு 22.05.2025

எனதருமை மகனே
விஷாந்துக் குட்டி,
36ஆவது பிறந்தநாளைத்
தனித்துக் கொண்டாடப்
போய்விட்டீரோ?
உமக்கு அம்மாவின்
கோடான கோடி
பிறந்தநாள் வாழ்த்துக்கள்.

உம்மைக் காணாமல் கதறியழும்
அம்மா திருமதி ஞானகௌரி
விக்னேஸ்வரன்
38/16, சொர்ணவடலி லேன்,
கொக்குவில் மேற்கு.


(4998)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# செம்மணி புதைகுழி விவகாரம்

# சர்வதேச விசாரணைக்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும்

## இந்திய பாராளுமன்ற உறுப்பினர் கோரிக்கை



**(டில்லி)**

**செம்மணி மனித புதைகுழி குறித்து சுயாதீன சர்வதேச காணிப்புடனான விசாரணைக்கு இந்தியா பரப்புரைசெய்ய வேண்டும் என இந்திய பாராளுமன்ற உறுப்பினர் சசிகாந்த் செந்தில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

செம்மணி மனித புதைகுழி குறித்து இந்தியப் பாராளுமன்றத்தில் உரையாற்றுவதற்கு அனுமதி கோரி பாராளுமன்றத்தின் கீழ்சபையின் செயலாளர் நாயகத்திற்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அவர் அதில் தெரிவித்துள்ளதாவது,"ஆறாம் திகதி இந்திய பாராளுமன்றத்தில் இந்த விவகாரம் குறித்து உரையாற்றுவதற்கான அனுமதியை நான் கோருகின்றேன். எனக்கு அனுமதியளிக்கப்பட்டால் பின்வரும் விடயங்கள் குறித்து நான் குறிப்பிடுவேன்.

இலங்கையின் வடபகுதியில் யாழ்ப்பாணத்தில் உள்ள செம்மணியில் சமீபத்தில் மனித புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை குறித்து தமிழ்நாட்டின் வேதனையை தெரிவிப்பதற்காக நான் இங்கு உரையாற்றுகின்றேன்

மீட்கப்பட்ட மனித எச்சங்கள், இலங்கையின் தமிழ் சமூகத்தின் நீண்டகாயங்களை மீண்டும் கிளறியுள்ளன. இவற்றில் சில மோதல்களின் போது பலவந்தமாக காணாமலாக்கப்பட்டவர்களின் மனித எச்சங்கள் என்று கருதப்படுகின்றது.

பல தசாப்தங்களாக இலங்கைத் தமிழர்கள் திட்டமிடப்பட்ட வன்முறைகள், பலவந்தமாக காணாமலாக்கப்படுதல் போன்றவற்றை எதிர்கொண்டுள்ளனர். அவர்களிற்கு நீதி மறுக்கப்பட்டுள்ளது. மனித புதைகுழி என்பது வெறுமனே ஒரு தடயவியல் இடம் மாத்திரமில்லை. இது மறைக்கப்பட்ட உண்மை தாமதிக்கப்பட்ட நீதிக்கான ஒரு குறியீடு.

ஈழத்தமிழர்களுடன் கலாசார, மொழி உறவுகளை பகிர்ந்துகொண்டுள்ள தமிழக மக்கள் தொடர்ந்தும் அலட்சியமாக இருக்க முடியாது.

இந்திய அரசாங்கம் உடனடியாக இந்த விடயத்தை இராஜதந்திர வட்டாரங்கள் ஊடாக அணுக வேண்டும். இந்த விடயத்தில் இலங்கை அரசாங்கத்திடமிருந்து முழுமையான வெளிப்படை தன்மையை கோர வேண்டும்.

செம்மணி மனித புதைகுழி குறித்து சுயாதீன சர்வதேசதிற்கு இந்தியா பரப்புரைசெய்ய வேண்டும். காணிப்புடனான விசாரணைக்கு நீதி நல்லிணக்கம் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளிற்கான தனது நீண்டகால நிலைப்பாட்டை இந்தியா மீள வலியுறுத்த வேண்டும்.

இந்தியா வெறுமனே பிராந்திய ஒத்துழைப்பு குறித்து மாத்திரம் குரல்கொடுக்க முடியாது. எல்லைகளிற்கு அப்பால் தமிழ் மக்களின் கௌரவம் உண்மை நீதிக்காகவும் குரல் கொடுக்க வேண்டும். என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# இலங்கையின் கையிருப்பு சொத்துக்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையின் உத்தியோகபூர்வ கையிருப்பு சொத்து கள் 2025 ஜூன் மாதத்தில் 6.8 பில்லியன் அமெரிக்க டொலராக இருந்த நிலையில், 2025 ஜூலை மாதத்தில் 1 சத வீதம் அதிகரித்து 6.14 பில்லியன் அமெரிக்க டொலராக உயர்ந்துள்ளது.

இதில், நிதி பரிமாற்ற ஒப்பந் தத்தின் கீழ் சீனா



வழங்கிய 1.4 பில்லியன் டொலர்களும் உள்ளடங்குகின்றன.

இதன் பயன்பாடு நிபந்தனைகளுக்கு உட்பட்டது என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (நி)

# இலங்கை மீது சைபர் தாக்குதல் நடத்தப்படக்கூடிய அபாயம்

## விடுக்கப்பட்டது எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கை மீது சைபர் தாக்குதல் நடத்தப்படக்கூடிய அபாயம் தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உலகின் முதனிலை சைபர் பாதுகாப்பு நிறுவனமான கெஸ்பர்ஸ்கி நிறுவனத்தினால் இந்த அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் மிக ஆக்ரோஷமான அச்சுறுத்தல் நிலவும் நாடுகளில் ஒன்றாக இலங்கை பெயரிடப்பட்டுள்ளது.

குறிப்பாக சைட்வைண்டர் என்ற சைபர் தாக்குதல் குழுவின் அச்சுறுத்தல் நிலவுவதாகவும், இதில் இலங்கை ஓர் முக்கிய இலக்குகளில் ஒன்றாக அடையாளப்படுத்தியுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அரச இரகசியங்கள் உள்ளிட்ட முக்கியமான தகவல்களை இலக்கு வைத்து இந்த குழுக்கள் சைபர் தாக்குதல் நடத்துவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷ், கம்போடியா, வியட்நாம், சீனா, இந்தியா, மாலைத்தீவு, நேபாளம், மியான்மர், இந்தோனேசியா, மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகள் மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மின்னஞ்சல்கள் மூலம் சைபர் தாக்குதல்கள் நடத்தப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த சைபர் தாக்குதல்கள் தகவல்களை திரட்டும் நோக்கிலானது அல்ல எனவும் புவிசார் அரசியல் காரணிகளையும் அரச இரகசியங்களை கைப்பற்றும் நோக்கிலும் மேற்கொள்ளப்படுகினறது எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (நி)

# பொரளையில் துப்பாக்கிச் சூடு


## 23 வயதான இளைஞர் உயிரிழப்பு

(கொழும்பு)

பொரளை, சஹஸ்புரவில் உள்ள சிறிசர உயன அடுக்கு மாடி குடியிருப்பு வளாகத்திற்கு அருகில் நேற்று முன்தினம் இரவு நடந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் களனியைச் சேர்ந்த 23 வயதுடையவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டு சம்ப வத்தில் ஐந்து பேர் காயமடைந்து கொழும்பு



தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இது குறித்த மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி)

# அரச நிறுவனங்களில் நிலவும் வாகனப்பற்றாக்குறை

## நிவர்த்திக்க அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

அரச நிறுவனங்களில் நீண்டகாலமாக நிலவும் வாகனப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக, வாகனங்களை இறக்குமதி செய்ய பொது நிர்வாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு திட்டமிட்டுள்ளதாக அறிவித்துள்ளது.

அதன்படி 2,000 கப் ரக வானங்களை இறக்குமதி செய்ய பொது நிர்வாக மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

சில அரச துறைகளுக்கு கிட்டத்தட்ட 15 ஆண்டுகளாக புதிய வாகனங்கள் கிடைக்கவில்லை என்றும், இதன் விளைவாக அதிகாரிகள், குறிப்பாக களப் பணிகளில் ஈடுபடுபவர்களுக்கு குறிப்பிடத்தக்க சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கலாநிதி சந்தன அபேரத்ன தெரிவித்தார்.

பொதுத்துறை நிறுவனங்கள் எதிர்கொள்ளும் தளவாட சவால்களை முழுமையாக மதிப்பாய்வு செய்த பின்னர், ஜனாதிபதியின் அறிவுறுத்தல்களைத் தொடர்ந்து வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான முடிவு எடுக்கப்பட்டது. இதேவேளை வாகனங்களை வழங்குவதில் பிரதேச செயலகங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று அமைச்சர் வலியுறுத்தினார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தேசிய மட்ட முய் தாய் போட்டியில் வவுனியா விபுலானந்தா கல்லூரி சாதனை




அகில இலங்கை முய் தாய் போட்டிகளில் தேசிய மட்டத்தில் வவுனியா விபுலானந்தா கல்லூரி மாணவிகள் இருவர் சாதனை படைத்து விருதினைப் பெற்றுள்ளதுடன், அபுதாபியில் நடைபெறவுள்ள வேல்ட் சம்பியன் சிப் போட்டியிலும் கலந்து கொள்ளவுள்ளனர்.

வவுனியா விபுலானந்தா கல்லூரியில் கல்வி பயிலும் 16 - 17 வயது பிரிவில் செல்வி.ஜெசுவா ஜெசிதாஸ், 12 - 13 வயது பிரிவில் செல்வி டர்சிகா தச்சணாமூர்த்தி ஆகியோர் அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற முய் தாய் போட்டிகளில் (தாய் கிக் பாக்ஸிங்) பங்கு பற்றி தேசிய மட்டத்தில் சாதனை படைத்துள்ளனர்.

குறித்த மாணவிகளை கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது. பாடசாலை அதிபர் திருமதி ஞானமதி மோகனதாஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாணவிகள் பான்ட் வாத்திய அணி வகுப்புடன் வரவழைக்கப்பட்டு அவர்களுக்கு மாலை அணிவித்தும், பரிசில்கள் வழங்கியும் கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன் குறித்த மாணவிகள் எதிர்வரும் செம்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை அபுதாபியில் இடம்பெறும் மும் தாய் வேல்ட் சம்பியன் சிப் போட்டியிலும் இலங்கை சார்பாக பங்கு பெற்றவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (3-250)

## நியூசிலாந்தின் அதிரடி ஆட்டத்தால் 125 ஓட்டங்களில் சுருண்ட ஜிம்பாப்வே




நியூசிலாந்து கிரிக்கெட் அணி ஜிம்பாப்வேயில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடிவருகிறது. இதில் நடைபெற்ற முதல் போட்டியில் நியூசிலாந்து வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 2ஆவது மற்றும் கடைசி போட்டி புலவாயோவில் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது. இதில் நாயணச் சுழற்சியில் வென்று முதல் இன்னிங்சை தொடங்கிய ஜிம்பாப்வே அணி ஆரம்பம் முதலே நியூசிலாந்து பந்துவீச்சில் தடுமாறியது.

தொடக்க ஆட்டக்காரர் ஆன பிரண்டன் டெய்லர் (44ஓட்டங்கள்), மிடில் ஆர்டரில் தபட்ஸ்வா சிகா (33 ஓட்டங்கள்) ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தால் ஜிம்பாப்வே 100 ஓட்டங்களை கடந்தது. இவர்களை தவிர யாரும் 15 ஓட்டங்களை கூட தாண்டவில்லை.

48.5 ஓவர்கள் தாக்குப்பிடித்த ஜிம்பாப்வே முதல் இன்னிங்சில் 125 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது. அபாரமாக பந்துவீசிய நியூசிலாந்து தரப்பில் மேட் ஹென்றி 5 விக்கெட்டுகளும். சக்காரி பவுல்க்ஸ் 4 விக்கெட்டுகளும் வீழ்த்தினர். (3)

## ஜூலை மாத சிறந்த வீரர் விருது; சுப்மன் கில் பெயர் பரிந்துரை




ஒவ்வொரு மாதமும் சிறந்த கிரிக்கெட் வீரரை தேர்வு செய்து ஐ.சி.சி கௌரவித்து வருகிறது.

அந்த வகையில் ஜூலை மாதத்திற்கான சிறந்த வீரரை தேர்வு செய்ய தலா 3 வீரர்களை ஐ.சி.சி அறிவித்துள்ளது.

அதன்படி, ஜூலை மாதத்திற்கான சிறந்த வீரர் விருதுக்கான பரிந்துரை பெயர் பட்டியலில் இந்தியாவின் கிரிக்கெட் வீரர் சுப்மன் கில், இங்கிலாந்தின் கிரிக்கெட் வீரர் பென் ஸ்டோக்ஸ், தென் ஆபிரிக்காவின் கிரிக்கெட் வீரர் வியான் முல்டர் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இங்கிலாந்து, இந்தியா இடையிலான டெஸ்ட் தொடரில் சுப்மன் கில் சிறப்பாக விளையாடியதைத் தொடர்ந்து பரிந்துரைப் பட்டியலில் இடம்பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

## ஆசிய கோப்பை ஹொக்கி பாகிஸ்தான் அணி விலகல்



ஆசிய கோப்பை ஹொக்கி போட்டி வருகிற 29ஆம் திகதி முதல் செப்ரெம்பர் 7 ஆம் திகதி வரை பீகார் மாநிலம் ராஜ்கிரியில் நடைபெறவுள்ளது. இதில் இந்தியா, பாகிஸ்தான். மலேசியா, தென் கொரியா, ஜப்பான், சீனா, ஓமன். சீன தைபே ஆகிய நாடுகள் பங்கேற்கும் என்று அறிவிக்கப்பட்டது.

பகல்காம் தாக்குதலுக்கு பிறகு ஏற்பட்டுள்ள அரசியல் சூழ்நிலை காரணமாக இந்தப் போட்டியில் பாகிஸ்தான் அணி பங்கேற்குமா? என்ற சந்தேகம் ஏற்பட்டிருந்தது. அதே நேரத்தில் இந்தியா வருவதற்காக பாகிஸ்தான் சீனியர் அணி 18 வீரர்கள் மற்றும் துணை ஊழியர்களை கொண்ட குழு விசாவுக்கு விண்ணப்பித்தது. இதனால் பாகிஸ்தான் அணி கலந்து கொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் ஆசிய கோப்பை போட்டியில் பாகிஸ்தான் அணி பங்கேற்காது என்று ஹொக்கி இந்தியா அமைப்பின் நிர்வாகி ஒருவர் தெரிவித்தார். பாதுகாப்பு காரணங்களுக்காக ஆசிய கோப்பையில் விளையாட இயலாது என்று பாகிஸ்தான் ஹொக்கி சம்மேளனம் ஆசிய ஹொக்கி கூட்டமைப்புக்கு கடிதம் எழுதியுள்ளது

பாகிஸ்தான் வீரர்களுக்கு விசா வழங்க மத்திய அரசு தயாராக இருந்த போதிலும் அவர்கள் இந்தியாவுக்கு வர மறுத்து விட்டனர். பாகிஸ்தானுக்கு பதிலாக வங்களா தேசத்தை அழைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. ஆசிய கோப்பை போட்டி 2026 கோப்பைக்கான தகுதி சுற்று போட்டியாகும். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# உலக ரோபோ மாநாடு சீனாவில் ஆரம்பம்

(பிஜிங்)

உலக ரோபோ மாநாடு சீனாவின் பிஜிங் நகரில் நேற்று ஆரம்பமானது.

200இற்கு மேற்பட்ட நிறுவனங்களின் 1500இற்கும் மேற்பட்ட தயாரிப்புக்கள் இந்த மாநாட்டில் காட்சிப்படுத்தப்படும் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. இதில் 20 மனித உருவ ரோபோ உற்பத்தி நிறுவனங்கள் இவ்வாண்டின் ரோபோ மாநாட்டில் கலந்துகொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (நி)

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 01 பொன்னாலை வீதியில் அமைந்துள்ள 718 எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சொந்தக்காரர் என ஆதனப்பதிவேட்டில் காணப்படுகிறது. இவ்வாதனத்தை காலி வெள்ளவத்தையைச் சேர்ந்தவர்களான சின்னம்மா கனகராசாவும் பெண் சரஸ்வதி ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு கே.எம்.இராதா கிருஷ்ணன் முகதாவில் 05.04.2011ஆம் திகதி 632ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் விஸ்தீரணம் நெற்பரப்பு 25 குளி 5.87 அளவு கொண்ட ஆதனத்தை மகாதேவன் அமிர்தலிங்கம் பெண் சுமித்திராவிற்கும் மகாதேவன் அமிர்தலிங்கத்திற்கும் நன்கொடையாக வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் காரைநகர் வீதி, வில்லூன்றிப்பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்தவர்களான மகாதேவன் அமர்தலிங்கமும் பெண் சுமித்திரா ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு கே.எம் இராதா கிருஷ்ணன் முகதாவில் 25.06.2011ஆம் திகதி 659ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் விஸ்தீரணம் நெற்பரப்பு 4 அளவு கொண்ட ஆதனத்தை யாக்கோப்பிள்ளை கிறிசாந்துவிற்கு அறுதியாக வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி ஓட்டுமடத்தை சேர்ந்த யாக்கோப்பிள்ளை கிறிசாந்து என்பவர் பிரசித்த நொத்தாரிசு கே.எம்.இராதா கிருஷ்ணன் முகதாவில் 16.02.2012ஆம் திகதி 8800 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் விஸ்தீரணம் நிலப்பரப்பு 2 குளி 12 அளவு கொண்ட ஆதனத்தை செபமாலை, பிரான்சிஸ்சிற்கு அறுதியாக வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், மானிப்பாய் வீதி ஓட்டுமடத்தை சேர்ந்த பிரான்சிஸ் கைம்பெண் அன்னம்மாவும் செபமாலைபிலோமினாவும், பிரான்சிஸ் கலிஸ்ரனும், துஸ்யந்தன் சர்மிளாவும் ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு சிவலிங்கம் இளங்கீரன் முகதாவில் 2023.09.09 ஆம் திகதி 16138ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அழியா நன்கொடை உறுதி மூலம் யாக்கோப்பிள்ளை கிறிசாந்து பெண் யோகராணி என்பவரிற்கு வழங்கியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், வண்ணார் பண்ணைக் கோவிற்பற்று யாழ்ப்பாண மாநகர சபை யாழ்ப்பாண பிரதேச செயலகம் J/88 கிராமசேவகர் பிரிவில் அமைந்துள்ள வண்ணார் பன்னை வடமேற்கு இறை "கிழவனோடையும் மணற்காடு கோம்பயனும்" விஸ்தீரணம் நில.பர 2குளி 12 கடையும் கிணறும், மற்றுமதற்குச் சேர்ந்தவைகளுக்குமான எல்லைகள்

கிழக்கு :- மகாவேன் அமிர்தலிங்கத்திற்கும் பெண் சுமித்திராவிற்குமான ஆதனம்
வடக்கு :- மகாவேன் அமிர்தலிங்கத்திற்கும் பெண் சுமித்திராவிற்குமான ஆதனம்
மேற்கு : முதலிகுள வாய்க்கால்
தெற்கு :- மானிப்பாய் வீதி இதடங்கலும்

தற்போது இவ்வாதனத்தை யாக்கோப்பிள்ளை கிறிசாந்து பெண் யோகராணி என்பவர் தமது பெயரை எமது ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது யாக்கோப்பிள்ளை கிறிசாந்து பெண் யோகராணி என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**முதல்வர்**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

(C-3604)

# இராசிபலன்

09.08.2025
ஆடி 24, சனிக்கிழமை
பூரணை பிற்பகல் 2.21
திருவோணம் பிற்பகல் 4.01 மணிவரை

சுப நேரம் 3.04-4.34 மணிவரை
இராகுகாலம் 9.04-10.34 மணிவரை
பூரணை விரதம்

சந்திராஷ்டமம்
புநர்பூசம், பூசம்

**வளவன்**

**மேஷம்** எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், வீட்டைச் சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**ரிஷபம்** வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பய ணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** நட்பு பகையாகாதிருக்க விழிப்புணர்வு அவசியம், பயணங்களின் போது நிதானம் தேவை, உடல்நலனில் கவனம் தேவை, வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள்.

**கடகம்** புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, நண்பர்கள் சந்திப்பால் பர வசமடைவீர்கள், எடுத்த காரி யங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்,

**சிம்மம்** குடும்பத்தில் ஏற்பட்ட முரண்பாடுகள் அகலும், கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, நன்மைகள் நாடி வரும் நாள்.

**கன்னி** பொது நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**துலாம்** வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம் பெறலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம், போசன சுகமுண்டு

**விருச்சிகம்** விருந்தினர் வருகையுண்டு, பணப் பழக்கம் அதிகரிக்கும் நாள், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**தனுசு** புத்தி சாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவஙங்கள் இடம்பெறலாம், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மகரம்** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், வியாபார நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், ஆழ்ந்த சிந்தனையுண்டு, பயணங்கள் கைகூடும்.

**கும்பம்** ஒரு வேலையை முடிக்க ஒன்றுக்கு இரண்டு முறை அலைய நேரிடலாம், உடல் நலனில் கவனம் தேவை, மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மீனம்** ஆடம்பரப்பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப் புண்டு, குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், செல்வாக்கு மேலோங் கும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**நேர்மையானவர் நம்பிக்கையில் வாழ்வார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் ஆலயத்திற்கு செல்வோருக்கு பொலிஸாரின் முக்கிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் திருவிழாவில் நகைகளைக் களவாட இலங்கையின் பல பாகங்களில் இருந் தும் திருடர்கள் நல்லூர் ஆலயத்திற்கு வருகை தந்துள்ளமையால், ஆலயத்திற்கு செல்லும் பக்தர்கள் அவதானமாகச் செல்லுமாறு யாழ்ப்பாணப் பொலி ஸார் அறிவுறுத்தியுள்ளனர். ஆலயச் சூழலில் திருடர்களின் நடமாட்டம் காணப்படுவதால், ஆலயத்திற்கு தங்க நகைகளை அணிந்து வருவதைத் தவிர்க்குமாறும், அணிந்துள்ள தங்க நகைகளில் கவனம் செலுத்துமா றும் பொலிஸார் கோரியுள்ள னர்.

அத்துடன் பொலிஸ் சீருடை மற்றும் சிவில் உடைகளில் பொலிஸார் ஆலயச் சூழல்களில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனவும் அருகில் உள்ளவர்கள் தொடர் பில் சந்தேகங்கள் எழுந்தால், பொலிஸாருக்கு உடன் அறிவிக்குமாறும் பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

அதேவேளை ஆலயச் சூழல்களில் கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்பட்டு, அனைவரும் கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (8-33)

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு இலங்கை இளங்கலைஞர் மன்றமும் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபமும் இணைந்து வழங்கும் "தெய்வீக இசையரங்கு" இன்று சனிக்கிழமை மாலை 6.45 மணி தொடக்கம் 8.30 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணிமண் டபத தில் இடம்பெறவுள்ளது.

அந்த வகையில்இசையரங்கு நிகழ்வில் பாட்டு- திருமதி சிவறஞ்சினி றமணசர்மா, வயலின்- செல்வன் றமண சர்மா லயசர்மா, மிருதங்கம்- வ.றமணசர்மா, கெஞ்சிரா- செல்வன் உ. பக்தவர்சல சர்மா, மோர்சிங்- செல்வன் றமணசர்மா கானாமிருதசர்மா அகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து இடம் பெறவுள்ள நாட்டியரங்கு நிகழ்வில் நடனம்- அபினய கலாகேந்திரா மாணவர்கள், நட்டுவாங்கம்- திருமதி. பபிதா றமணன், பாட்டு- திருமதி. சிவரஞ்சினி றமணசர்மா, மிருதங்கம்- வ. றமணசர்மா, வயலின்- செல்வன் றமண சர்மா லயசர்மா ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (3)

# இலவச யோகா பயிற்சி வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

உலக சமாதான ஆலயத்தின் அனுசரனையுடன் மேற்கொள்ளப்படவுள்ள இலவச யோகா பயிற்சி வகுப்புக்கள் யா/இணுவில் இந்துக் கல்லூரியில் இன்று சனிக்கிழமை மாலை 4 மணி முதல் ஆரம்பமாகி தொடர்ச்சியாக மூன்று மாதங்கள் நடை பெறவுள்ளன.

சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 4 மணிக்கு நடைபெறும் இந்தப் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்பவர்களுக்கு மூன்று மாதப்பயிற்சி நிறைவில் சான்றிதழ் வழங்கப்படும்.

இந்தப் பயிற்சி வகுப்பில் ஆண், பெண் இருபாலரும் கலந்து கொள்ளலாம்.

பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள நாட்ட முள்ளவர்கள் 077 047 6398 எனும் தொலைபேசி இலக் கத் திற்குத் தொடர்பு கொண்டு மேல திக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 160 | 200 | 230 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 190 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 150 | 150 | 200 | 160 | 200 |
| தக்காளி | 150 | 200 | 250 | 130 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 300 | 250 | 200 |
| கோவா | 300 | 300 | 280 | 200 | 400 |
| கரட் | 420 | 500 | 600 | 380 | 500 |
| பூசணி | 100 | 140 | 70 | 80 | 100 |
| புடோல் | 100 | 100 | 200 | 120 | 150 |
| வாழைக்காய் | 120 | 120 | 120 | 100 | 150 |
| சின்ன வெங்காயம் | 200 | 150-250 | 350 | 250 | 250 |
| பெரிய வெங்காயம் | 150 | 180 | 150 | 110 | 150 |
| பாகற்காய் | 300 | 400 | 300 | 350 | 400 |
| வெண்டக்காய் | 150 | 100 | 150 | 100 | 300 |
| கருணைக் கிழங்கு | 300 | 330 | 250 | 250 | 400 |
| பயற்றங்காய் | 150 | 250 | 200 | 150 | 200 |
| லீக்ஸ் | 300 | 250 | 200 | 200 | 300 |
| பீற்றூட் | 150 | 100 | 150 | 130 | 150 |
| கறிமிளகாய் | 400 | 600 | 500 | 480 | 600 |
| முருங்கைக்காய் | 300 | 500 | 500 | 230 | 400 |
| போஞ்சி | 800 | 800 | 800 | 600 | 1000 |
| கத்தரிதம்புள்ள | 150 | 120 | 300 | -- | 160 |
| கீரை - 1 பிடி | 100 | 40-120 | 150 | 80 | 100 |
| தேசிக்காய் | 200 | 100 | 150 | 100-250 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 180 | 150 | 120-220 | 150-200 |
| இராசவள்ளி | 800 | 700 | 700 | 500 | 800 |
| வெங்காயப்பூ | 400 | 300 | 300 | 250 | 500 |
| முள்ளங்கி | 150 | 120 | 150 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | 150 | 100 | 100 | 200 |

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

ஈழ நல்லூர் கந்தசுவாமி ஆலய வரலாற்றுண்மையும் ஞானப்பொருள் விளக்கமும் என்னும் கு.சண்முகநாதன் எழுதிய நூல் வெளியீட்டுவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு நல்லை ஆதீனத்தில் இடம்பெறவுள்ளது.

இவ் விழாவில் வாழ்த்துரையினை கொழும்பு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கப் பணிப்பாளர் ய. அநிருத்தனன், வெளியீட்டுரையினை சைவ வித்தியா விருத்திச் சங்கத் தலைவரும் பலாலி ஆசிரிய கலாசாலை ஓய்வுநிலை அதிபருமாகிய கவிஞர் சோ. பத்மநாதன் நிகழ்த்தவுள்ளதோடு நயப்புரையினைத் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் வழங்கவுள்ளார்.

அத்துடன் ஓய்வுநிலை வைத்திய அதிகாரி ஆறுமுகம் திருநாவுக்கரசு நூலின் முதற் பிரதியை பெற்றுக் கொள்ள வுள்ளதோடு ஏற்புரையையும் நன்றியுரையையும் கு. சண்முகநாதன் வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)




## கா! நல்லைக் குமரேசனே!

நித்தமும் போற்றியே நெஞ்சிலுனை யேற்றியே
நின்னருளை வேண்டுபவர்க்கும்
சித்தமுஞ் சீராகச் செலுத்தியே யான்மீகச்
சிந்தனையி லாழ்ந்துமூழ்கி
வித்தகப் பெருமானை விரைந்தாற்றிப் போற்றியே
விளைகின்ற யாவற்குமே
எத்திக்கும் தித்திக்கும் இன்வாழ்வு நல்குவான்
இறைநல்லைக் குமரேசனே!

கலாபூஷணம்,
சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்.

## இன்பமாக வாழ வைய்

அழகன் முருகன் அலங்காரக் கந்தன்
தமிழன் முருகன் தமிழரின் கந்தன்
பணக்கார கந்தன்- தமிழ்
பண்பாட்டின் கந்தன்

நல்ல ஊரில் குடியிருக்கும்
நல்லூர்க் கந்தன்
நானிலம் போற்றிடும்
நாடாளும் என் கந்தன்

கொத்துக் கொத்தாய் கொன்றழித்த
வேட்டுச் சத்தம் தீர்த்து வைத்தாய் .. !
செம்மணியில் புதைத்தோரை
வெளி உலகிற்கு காட்டி வைத்தாய்... !

சாந்தையூரிவன், தி.ராம்குமார்.

## போற்றும் அடியவர் நெஞ்சில் இருப்பான்

கொடியதாம் சேவல் அகவிருள் அகற்றிடும்
குமரன் வருவதைக் கூறியே நின்றிடும்
விடியலை வேண்டியே சேவல் கூவிடும்
வினைகள் தீர்த்திடும் சேவற்கொடியோனே
பொடியதாய் கிரௌஞ்சி மலையை அழித்தவன்
போற்றும் அடியவர் நெஞ்சில் இருப்பவன்
அடியவர் அஞ்ஞானவிருள் அகற்றிடும்
ஆனந்த வேலனை நல்லூரில் காண்போம்

சைவப்புலவர் செ. பரமநாதன்,
தாவடி கிழக்கு.

## படைப்பாயோ கந்தா

பெரு வீதிகொண்ட முருகா
பேறுபெற வந்தோம் மருகா
உயர்ந்தோர் உயருவதும்
உயர்ந்த சப்பறமாய்
தேய்வது கீழோருமா?
தேரின் கட்டையாய்
தேடி வந்து நசியிறோம்
தெளிக்கும் தீர்த்தம் பட
விழிக்கும் நாளொன்றுக்காள் வீதியிலே உறுழுகின்றோம்
நல்லூரின் கந்தனே நியாயமாய் கேட்கின்றோம்
பழிக்கும் நிலைநீங்க படைத்திடு சமத்துவத்தை

விநாயகர் சாந்தை மு. ரமேஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில்
# மகப்பேற்று சேவைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் மீண்டும் மகப்பேற்று சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என வைத்தியசாலை பணிப்பாளர் சபை தெரிவித்துள்ளது.

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை 1935ஆம் ஆண்டில் சிறிய Dispensary ஆக மக்களுக்காக உருவாக்கப்பட்டு 1936ஆம் ஆண்டில் கூட்டுறவு திணைக்களத்தின் கீழ் பதியப்பட்டதிலிருந்து தனியாக 1985ஆம் ஆண்டு வரை சேவை இடம்பெற்றது.

பின்பு 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏற்பட்ட இடம்பெயர்வின் காரணமாக சேவைகள் இடம்பெறவில்லை. 1996ஆம் ஆண்டு யூலை மாதம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.


ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்துவரும் பணிப்பாளர் சபையின் முயற்சியில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழ்கின்ற கொடையாளர்கள் மற்றும் நிறுவனங்களின் பங்களிப்புடன் முந்தைய நிலைக்கு கொண்டுவரப்பட்டது.

அந்தவகையில் தற்போதைய பணிப்பாளர் சபை மீண்டும் மகப்பெற்று வசதியை வைத்தியசாலையில் ஏற்படுத்த வேண்டும் என ஜப்பான் தூதரகத்திடம் விண்ணப்பம் செய்தமைக்கு இணங்க அவர்களினால் வழங்கப்பட்ட நிதியுதவி மூலம் மகப்பேற்றுதுறை மற்றும் பகுதி என்பன புனரமைப்பு செய்யப்பட்டு அதற்கான உபகரணங்களும் கொள்வனவு செய்யப்பட்டன.

இதன் பலனாக மகப்பேற்று சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்றைய தினம் மூளாய் வைத்தியசாலையில் மகப்பேற்று சிகிச்சை உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (8)

## சர்வதேச இளைஞர் தினத்தை முன்னிட்டு மன்னாரில் விழிப்புணர்வு நடைபயணம்!




(மன்னார்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் நிர்வகிக்கப்படுகின்ற இளைஞர் கழகங்களுக்கான 19ஆவது தேசிய இளைஞர் சம்மேளன தெரிவானது சர்வதேச இளைஞர் தினமான எதிர்வரும் 12ஆம் திகதி ஜனாதிபதியின் தலைமையில் தேசிய இளைஞர் சம்மேளனம் அமைக்கப்படவுள்ளது.

சர்வதேச இளைஞர் தினத்தை முன்னிட்டு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் நாடு பூராகவும் விழிப்புணர்வு நடைபயணம் முன்னெடுக்கப்படுகின்றது.

இந்நிலையில் மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் பஸார் பகுதியில் நேற்றுக் காலை 10 மணிக்கு ஆரம்பமான குறித்த நடைபயணம் பிரதான வீதியூடாக சென்று மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியில் அமைந்துள்ள மன்னார் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அலுவலகத்தை சென்றடைந்தது.

இதன்போது இளைஞர்கள் போதைப்பொருள் பாவனைக்கு எதிராகவும், சுற்றுச்சூழலை பாதுகாக்கும் விதமாகவும் பல பதாகைகள் ஏந்தி வீதி வழியாக தமது பேரணியை மேற்கொண்டனர். குறித்த விழிப்புணர்வு நடைபயணத்தில் மன்னார் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவிப்பணிப்பாளர் பூலோக ராஜா, இளைஞர் சேவை அதிகாரிகள், இளைஞர்கள், யுவதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (8-285)

## “மனுசங்கடா” திரைப்படம் திரையிடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் திரைப்படக் கழகத்தின் மாதாந்த நிகழ்ச்சியாக அம்ஷன்குமார் நெறியாள்கையில் உருவான “மனுசங்கடா” திரைப்படம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம், கந்தர்மடம் 18/2, அம்மன் வீதியில் அமைந்துள்ள (பலாலி வீதி, வீனஸ் மருத்துவமனை அருகாமை) “எங்கட புத்தகங்கள்” இல்லத்தில் இலவசக் காட்சியாக திரையிடப்படவுள்ளது.

இத் திரைப்படமானது கெய்ரோ உலகத் திரைப்பட விழாவில் திரையிடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (க-8)

## யோகா பயிற்சிகள்

மனவளக்கலைமன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலில் இந்த வாரத்திற்கான மனவளக்கலைப்பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல.81, பிறவுண் வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத்திருக்கோவிலில் ஆரம்பமாகவுள்ளது.

சக்கரை நோய் கட்டுப்பட, ஆஸ்துமா சளித்தொல்லை நீங்க, இரத்த அழுத்தம் கட்டுப்பட, தூக்கம்சம்பந்தப்பட்ட பிரச்சினை தீர, தைராய்டு பிரச்சினை தீர எளியமுறை உடற்பயிற்சிகள், எளியமுறை குண்டலினி தியானப் பயிற்சிகள் உயிர்வளத்திற்கான காயகல்பப் பயிற்சிகள் மற்றும் சூரிய நமஸ்காரம் வழங்கப்படும். பயிற்சிகளை 14 வயதிற்கு மேற்பட்ட ஆண்மற்றும்பெண் இருபாலரும் பங்குபெறலாம்.

பயிற்சிகளை தமிழ்நாட்டில் இருந்து வருகை தந்துள்ள மனவளக்கலை பேராசிரியர் K.R.முனிரத்தினம் வழங்கவுள்ளார்.

தொடர்புகளுக்கு 021222 2772, 0768571395 (8)

## ஆடியபாதம் வீதியில் டிப்பர், பாரவூர்திகள்
# பயணிக்க கட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச சபை ஆளுகைக்கு உட்பட்ட ஆடியபாதம் வீதியில் டிப்பர் மற்றும் பாரவூர்திகள் பயணிக்க கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் ப.மயூரன் விடுத்துள்ள அறிவித்தலில்,

வீதிப்போக்குவரத்தை இலகுபடுத்தும் நோக்கோடு முன்பள்ளி சிறார்கள், பாடசாலை மாணவர்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோர் பணிக்கு செல்லும் நேரங்கள் மற்றும் அண்மையில் ஏற்பட்ட வீதி விபத்துக்கள் ஆகியவற்றினைக் கருத்திற்கொண்டு பின்வரும் விடயங்கள் நல்லூர் பிரதேச சபையின் சபைத் தீர்மானங்களாக ஆக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் எதிர்வரும் 01ஆம் திகதி முதல் மண் ஏற்றிச் செல்லும் டிப்பர் வாகனங்கள் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை ஆடியபாதம் வீதியூடாக பயணிப்பதற்கு முற்றாக தடை விதிக்கப்படுவதோடு ஏனைய பாரவூர்திகள் காலை 7 மணி தொடக்கம் காலை 9 மணி வரையும் நண்பகல் 12.00 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணிவரையும் கல்வியங்காட்டுச் சந்தியிலிருந்து கொக்குவில் சந்தி வரையான ஆடியபாதம் வீதியூடாக பயணிப்பதற்கு தடை விதித்து பொதுப்போக்குவரத்தினை இலகுபடுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயத்தினை எதிர்வரும் 01ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்துவதற்கு ஒத்துழைப்பும் கண்காணிப்பும் வழங்குமாறு யாழ்ப்பாண சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கும், கோப்பாய் பொலிஸாருக்கும் கடிதம் மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நல்லூர்ப் பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசங்களில் பொதுப் போக்குவரத்தினை இலகுபடுத்தல் செயற்றிட்டம் முதற்கட்டமாக கல்வியங்காட்டுச் சந்தியிலிருந்து கொக்குவில் சந்தி வரையான ஆடியபாதம் வீதியில் செயற்படுத்தப்படுகின்றது. எதிர்வரும் காலங்களில் குறித்த செயற்றிட்டம் ஏனைய வீதிகளிலும் நடைமுறைப்படுத்தப்படும் என தெரிவித்தார். (8-33)

## சர்வதேச கல்விக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

SKY GATE INTER NATIONAL நிறுனத்தால் சர்வதேச கல்விக் கண்காட்சி ஒன்று நடத்தப்படவுள்ளது.

இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். ரில்கோ விடுதியில் ஆரம்பமாகும் இந்நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமையும் இடம்பெறும்.

இரு நாட்களிலும் காலை 10 மணிமுதல் மாலை 5 மணி வரை இக்கல்விக் கண்காட்சியைப் பார்வையிடலாம். (3)

## தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிராக ஆர்ப்பாட்டம்



(அராலி)

யாழ். வலிகாமம் தையிட்டியில் அமைந்துள்ள சட்டவிரோத திஸ்ஸ விகாரைக்கு எதிராக தொடர்போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதன் தொடர்ச்சியாக பௌர்ணமி தினமான நேற்றைய தினமும் குறித்த போராட்டமானது முன்னெடுக்கப்பட்டது.

சட்டவிரோத முறையில் அமைக்கப்பட்டுள்ள தையிட்டி திஸ்ஸ விகாரையை அகற்றுமாறு கோரி தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினர், மக்களுடன் இணைந்து தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், மாவீரர் போராளிகள் குடும்ப நல காப்பக தலைவர் தீபன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனபலரும் கலந்து கொண்டனர். (8-104-33)

## பனை மரங்களுக்கு தீ வைத்த விஷமிகள்
## அதிகளவான பனைகள் எரிந்து நாசம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு பகுதியில் நூற்றுக்கணக்கான பனை மரங்களுக்கு விஷமிகளால் தீ வைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை கட்டைக்காடு இராணுவ முகாமிற்கு முன்னால் காணப்பட்ட நூற்றுக்கணக்கான பனைகள் திடீரென தீப்பற்றி எரிந்தன.

இந்நிலையில் இராணுவத்தினர் தீயை அணைப்பதற்காக, தீயணைப்பு வாகனத்தை வரவழைத்ததுடன் மருதங்கேணி இராணுவ முகாமில் இருந்தும் தீயை அணைப்பதற்காக 200 இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டனர்.

பற்றி எரியும் தீ ஏனைய பனை மரங்களுக்கும் வேகமாக பரவிய நிலையில் தீ கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டது.

இதன்போது அதிகளவான பனை மரங்கள் எரிந்து நாசமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# காசாவைக் கைப்பற்றும் திட்ட
# இஸ்ரேலிய அமைச்சரவை ஒ

(ஜெருசலேம்)

**காசா நகரை முழுமையாகக் கைப்பற்றும் திட்டத்திற்கு, இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் அலுவலகம் தெரிவித்துள்ளது.**

## எச்சரிக்கை விடுக்





ஹமாஸைத் தோற்கடிக்கவோ அல்லது கடத்தப்பட்டவர்களைத் திரும்பப் பெறவோ முடியாது என்று அமைச்சரவை அமைச்சர்களில் பெரும்பாலானோர் நம்பியதை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டது என்று அந்த அலுவலகம் தெரிவித்துள்ளது.

எனினும் இந்த நடவடிக்கை பேரழிவு விளைவுகளை ஏற்படுத்தக் கூடும் என்று ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது.

அத்துடன் பணயக் கைதிகளுக்கு ஆபத்தை விளைவிக்கலாம் என்றும் ஐக்கிய நாடுகள் சபை அச்சம் வெளியிட்டுள்ளது.

காசாவில் போரை முடிவுக்குக் கொண்டு வரவும், பிரதேசத்திற்குள் கூடுதல் உதவிகளை அனுமதிக்கவும், தமது நட்பு நாடுகள் உட்பட சர்வதேச அழுத்தத்தை, இஸ்ரேல் எதிர்கொள்ளும் நிலையிலே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இந்தநிலையில், காசா நகரத்தை ஆக்கிரமிப்பதற்கான அங்கீகரிக்கப்பட்ட திட்டங்கள் மற்றும் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ஐந்து கொள்கைகள் ஆகியவற்றை விபரிக்கும் ஒரு அறிக்கையை நெதன்யாகுவின் அலுவலகம் வெளியிட்டுள்ளது.

இது அமைச்சரவை பெரும்பான்மை வாக்குகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கூறுகிறது.

ஹமாஸ் அமைப்பை நிராயு

## கென்யாவில் குடியிருப்பு பகுதியில் விழுந்து விபத்துக்குள்ளான விமானம்

## 6 பேர் உயிரிழப்பு



(நைரோபி)

கென்யா தலைநகர் நைரோபியில் மருத்துவர்களால் இயக்கப்படும் செஸ்னா விமானம் விபத்துக்குள்ளானதில் 6 பேர் உயிரிழந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

நைரோபியில் உள்ள வில்சன் விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட வைத்திய விமானம் சோமாலிலாந்து செல்லும் வழியில் நைரோபிக்கு அருகிலுள்ள ம்விஹோகோ என்ற குடியிருப்பு பகுதியில் விபத்துக்குள்ளானது.

நேற்று முன்தினம் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெ விக்கப்படுகிறது.

இந்த விபத்தில் விமானத்தில் இருந்த நான்கு பேர் மற்றும் தரையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

...த்திற்கு
...ப்புதல்
...தும் ஐ.நா



மாக்குவது.

அனைத்து பணயக் கைதிகளையும் - உயிருடன் இருப்பவர்களையும் மற்றும் இறந்தவர்களையும் திருப்பி அனுப்புதல்.

காசா பகுதியை இராணுவமயமாக்குதல்.

காசா பகுதியில் இஸ்ரேலிய பாதுகாப்பு கட்டுப்பாடு.

ஹமாஸ் அல்லது பாலஸ்தீன அதிகார சபை அல்லாத ஒரு மாற்று சிவில் அரசாங்கத்தை நிறுவுதல் என்பன இந்த ஐந்து அம்சத் திட்டங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. (நி)

இருந்த இரண்டு பேர் என மொத்தம் ஆறு பேர் உயிரிழந்ததுடன் மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளதாகவும் வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

விமானம் புறப்பட்ட மூன்று நிமிடங்களில் தொடர்பை இழந்ததாக கென்யா சிவில் ஏவியேஷன் ஆணையம் தெரிவித்துள்ளது. விபத்துக்கான காரணத்தை கண்டறிய விசாரணை நடைபெற்று வருகிறது. (நி)



# அடுத்த வாரம்

## ட்ரம்ப் - புடின் சந்திப்பு



### வெள்ளை மாளிகை தகவல்

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை அடுத்தவாரம் சந்திக்கக்கூடும் என வெள்ளை மாளிகை அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

எனினும் இது குறித்து இறுதி முடிவெடுக்கப்படவில்லை, சந்திப்பிற்கான இடம் குறித்து இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என வெள்ளை மாளிகை அதிகாரி தெரிவித்துள்ளார்.

பெயர் குறிப்பிடவிரும்பாத அதிகாரியொருவர் இதனை தெரிவித்தார் என அசோசியேட்டட் பிரஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

ட்ரம்ப் ரஷ்ய உக்ரைன் ஜனாதிபதிகளை சந்திப்பதற்கு தயார் என வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

உக்ரைன் ரஷ்ய யுத்தத்தை முடிவிற்கு கொண்டுவருவதற்கான முயற்சிகளில் ட்ரம்ப் ஈடுபட்டுள்ள நிலையிலேயே இந்த சந்திப்பு இடம்பெறவுள்ளதாக வெள்ளை மாளிகை அதிகாரி தெரிவித்துள்ளார்.


இந்த சந்திப்பு இடம்பெற்றால் அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் ட்ரம்ப் புடினை சந்திப்பது இதுவே முதல்தடவையாக அமையும்.

உக்ரைன் ரஷ்யா இடையிலான 3 வருட யுத்தத்தில் இது முக்கியமைல்கல்லாக விளாங்கும்.

இதேவேளை செய்தியாளர்களிற்கு கருத்து தெரிவிக்கையில் இந்த சந்திப்பு எங்கு இடம்பெறும் என்பது குறித்து பதிலளிக்காத அமெரிக்க ஜனாதிபதி புடினினுடான சந்திப்பிற்கான வாய்ப்புகள் அதிகம் என தெரிவித்துள்ளார். (நி)

# சீனாவில் தொங்கு பாலம் அறுந்து விழுந்து விபத்து!

- ஐவர் உயிரிழப்பு
- 24 பேர் படுகாயம்



(பீஜிங்)

சீனாவின் கசாக் மாகாணம் ஜின்ஜியாங் நகரம் இயற்கை எழில் வாய்ந்த சுற்றுலா நகரம் ஆகும்.

மலைகள் நிறைந்த அந்த பகுதியில் உள்ள ஆற்றின் குறுக்கே தொங்குபாலம் அமைக்கப்பட்டு உள்ளது.

இதில் ஏறி நின்று இயற்கை அழகை ரசிப்பதற்காக ஏராளமானோர் அங்கு செல்வது வழக்கம்.

அந்தவகையில் நேற்று முன்தினம் சுற்றுலா பயணிகள் பலர் அங்கு சென்றிருந்தனர்.

அப்போது அந்த பாலத்தின் கேபிள் திடீரென அறுந்தது. இதனால் பாலத்தின் மீது நின்றவர்கள் ஆற்றங்கரை அருகே கற்கள் நிறைந்த பகுதியில் விழுந்தனர்.

மீட்பு படையினர் அங்கு செல்வதற்குள் 5 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். படுகாயம் அடைந்த 24 பேர் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

அவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் பலி எண்ணிக்கை உயரும் என அஞ்சப்படுகிறது. விபத்தில் பலியானோருக்கு அந்த நாட்டின் ஜனாதிபதி ஜின்பிங் தனது இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே அந்த பாலம் அறுந்து விழும் காட்சிகள் அங்குள்ள சமூக வலைத்தளங்களில் வைரலாக பரவியது. இதுகுறித்து பொலிஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

முதற்கட்ட விசாரணையில், பாலத்தின் மீது அளவுக்கு அதிகமான சுற்றுலா பயணிகள் ஏறி நின்றதால் பாரம் தாங்காமல் அறுந்தது தெரியவந்துள்ளது. (நி)

# உதவிக்கு வந்த லொறிகள் கவிழ்ந்து 20 பேர் உயிரிழப்பு

## காசாவில் துயரம்

(காசா)

காசாவில் இஸ்ரேலின் தாக்குதல்களில் மேலும் பலர் கொல்லப்பட்டு பட்டினியால் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 200ஐ நெருங்கி இருக்கும் நிலையில் உதவிகளை பெற கூடியவர்கள் மீது உதவி லொறிகள் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 20 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

மத்திய காசாவில் கடந்த செவ்வாய்க்கிழமை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. நூற்றுக்கணக்கான மக்கள் உதவிக்காக காத்திருந்தபோது அங்கு வந்த உதவி லொறிகள் அவர்கள் மீது கவிழ்ந்ததாக காசா சிவில் பாதுகாப்பு நிறுவனத்தின் பேச்சாளர் மஹ்மூத் பசல் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதியில் இது நடந்திருப்பதாகவும் வீதிகள் கரடுமுரடான மற்றும் அபாயகரமானதாக இருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார். இதன்போது நான்கு லொறிகள் கவிழ்ந்திருப்பதோடு மேலும் 30 பேர் வரை காயமடைந்துள்ளனர்.

உதவி வாகனங்களை நோக்கி வந்த மக்கள் அதன் மேல் கூட்டமாக ஏறியதால் அந்த வானங்கள் ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானது. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்று சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த திருவிழாவின் 10 ஆம் திருவிழாவான மஞ்சத்திருவிழா நேற்று முன்தினம் சிறப்பாக இடம்பெற்றது.

# உயர்கல்வி மாணவர்களுக்கான கல்வி அமைச்சின் அறிவிப்பு

(கொழும்பு)

2025 ஆம் ஆண்டு க.பொ.த (உயர்தர) பரீட்சைக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி திகதி நீட்டிக்கப்பட்டுள்ளது என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி, ஓகஸ்ட் 12 ஆம் திகதி நள்ளிரவு 12 மணிவரை இணைய வழியில் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும்.

2024 ஆம் ஆண்டு மீள் மதிப் பீட்டு பெறுபேறுகளின் அடிப்படையில் 2025 உயர்தர பரீட்சைக்கு விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் மற்றும் 2025 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு குறிப்பிட்ட காலத்தில் விண்ணப்பிக்க முடியாதவர்களுக்கு இந்த நீட்டிக்கப்பட்ட கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த சலுகை காலம் எந்தவொரு காரணத்தைக் கொண்டும் மேலும் நீட்டிக்கப்படாது என்று கல்வி அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)


## கல்யாணமாலை

### சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:1979- இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>10இல் சூரிசெவ்<br>உயரம் : 5'4"<br>தகைமை/தொழில்: BSc,MSc,Civil Engineer(London)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்.விவாகரத்தானவர்கள்<br>தொ.இ: B/15685 | பிறப்பு-1993-இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி-பா- 6 1/2<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: Dip in IT, Banker<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/15502 |
| பிறப்பு:1985-இந்து<br>நட்சத்திரம்:திருவோணம்<br>1இல்சூரிசெவ்<br>உயரம் :5'5"<br>தகைமை/தொழில்-A/L,கடை<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15688 | பிறப்பு-1994-இந்து<br>நட்சத்திரம்-மூலம்<br>7இல்செவ்<br>கி-பா:15 1/4<br>உயரம் : 5'2"<br>தகைமை/தொழில்: CIMA, Senior Manager(pvt)<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/15506 |
| பிறப்பு:1995-இந்து<br>நட்சத்திரம்:மிருகசீரிடம்<br>கி-பா:33 1/4<br>உயரம்:6'2"<br>தகைமை/தொழில்:HNDE,Video Editor<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: B/15690 | பிறப்பு-1990-இந்து<br>நட்சத்திரம்-ரோகினி<br>கி-பா-17<br>உயரம் : 5'4"<br>தகைமை/தொழில்:Diploma,Teacher<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/15664 |
| பிறப்பு: 1987- இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்:A/L, Sales Manager<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15692 | பிறப்பு-1989-RC<br>நட்சத்திரம்-மிருகசீரிடம்<br>கி-பா:65<br>உயரம் : 5'<br>தகைமை/தொழில்: A/L , Cleark<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு, அரச உத்தியோகம்<br>தொ.இ: G/15679 |
| பிறப்பு: 1988- இந்து<br>நட்சத்திரம்:மூலம்<br>கி-பா:29<br>உயரம்:5'9"<br>தகைமை/தொழில்: BBA, Business (own)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15694 | பிறப்பு-1993-RC<br>நட்சத்திரம்-உத்தரம்<br>உயரம்-5'3"<br>தகைமை/தொழில்: BFA,DO<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/15669 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 424



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# விதியும் மதியும்!

இப்போது நாம் பார்க்கப்போவது மகாபாரத்திலே ஒரு காட்சி.

“தருமரிடம் இருக்கின்ற பதவியைப் பறிக்க வேண்டும். பொருளைப் பறிக்க வேண்டும். அதற்கு என்ன வழி? அப்படி என்று ஒரு ஆலோசனை நடந்தது ஒரு இடத்திலே.

சூதாட்டத்தின் மூலமாகத்தான் தருமரின் பதவியையும் பொருளையும் பறிக்க முடியும் என்று யோசனை சொல்கிறான் ஒருத்தன். வேறே யாரு? சகுனி தான்!

உடனே துரியோதனன் என்ன செய்தான் என்றால்? அழகான ஒரு மண்டபம் கட்டினான். தருமருக்கு மண்டபம் காண வாருங்கள். மனங்கலந்து சூதாடி மகிழ்வோம்! என்று ஒரு ஓலை எழுதுகின்றான்.

அந்த ஓலையிலே திருதராஷ்டிரனைக் கையெழுத்துப் போடச் சொல்கிறான். அதை விதுரர் மூலமாக அனுப்பி வைக்கின்றான். தருமரிடம் அந்த ஓலை வந்து சேர்ந்தது. உடனே அந்த ஓலையை எடுத்துக்கொண்டு தம்பிகளிடம் போகின்றார். தனித்தனியாக யோசனை கேட்கின்றார். முதல் தம்பியைப் பார்க்கிறார்.

இதோபார்! ஓலைவந்திருக்கு. கையெழுத்துப் போட்டிருக்கிறது திருதராஷ்டிரர்! மண்டபம் காணப் போவோமா? என்கின்றார்.

இன்னொரு தம்பியிடம் போகின்றார். இதோ பார் ஓலை வந்திருக்கு! அனுப்பியிருக்கிறது துரியோதனன் என்றார்.

அடுத்த தம்பியிடம் போகின்றார். இதோ பார் ஓலை வந்திருக்கு.எடுத்துக் கொண்டு வந்திருக்கிறது விதுரர்! என்றார். அதாவது ஒவ்வொரு தடவையும்

**திருதராஷ்டிரர் கையெழுத்திட்ட ஓலை.**
**துரியோதனன் அனுப்பிய ஓலை.**
**விதுரர் கொண்டுவந்த ஓலை**

என்கின்றார். கடைசியிலே சகாதேவனிடம் போகின்றார். அவன் கேட்டான் இந்த ஓலையிலே கையெழுத்துப் போட்டது யார்? திருதராஷ்டிர் என்றார் தருமர். அனுப்பியது யார்? என்றான். கொண்டு வந்தது யார்? என்றான் விதுரர் என்றார்.

இந்தக் கேள்விகளை சகாதேவன் திரும்பத் திரும்பக் கேட்கிறான். தருமரும் திரும்பத் திரும்பத் பதில் சொல்கின்றார். கடைசியிலே கேட்கிறார்.ஏன் இப்படித் திரும்பத் திரும்பக் கேட்கின்றாய் என்று.

இப்போது சகாதேவன் சொல்கின்றான். நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் அண்ணா? ஓலையில் கையெழுத்திட்டது ஒருத்தர். அனுப்பியது வேறே ஒருத்தர். கொண்டு வந்தது இன்னொருத்தர் என்றா நினைக்கின்றீர்கள். இந்த மூன்றையும் செய்தது ஒருத்தன் தான்.

அவன் இப்போது நம் அரண்மனை வாசலிலே நின்று கொண்டிருக்கின்றான் என்றான்.

யார் அது? என்று கேட்கிறார் தருமர்.

அது தான் விதி! என்றான் சகாதேவன். விதியின் படி ஒன்று நடக்கவேண்டும் என்று இருந்தால் மதியைக் கொண்டு அதை மாற்ற முடியாது என்கின்றார் ஒரு பெரியவர். (புலவர் கீரன்) ஏன் என்றால் விதி வருவதே மதியின் வழியாகத்தான் என்கின்றார் அவர்.

விதியை மாற்றுவதற்கு வழியே கிடையாதா? என்று கேட்டால்? ஏன் இல்லை? உண்டு! விதி அழைத்துக் கொண்டு போகின்ற இருட்டுப் பாதையிலே இடறி விழாமல் இருக்க வேண்டும் என்றால் கையிலே ஒரு கைவிளக்கு எடுத்துக்கொண்டு போக வேண்டும் என்கின்றார். அது என்ன கைவிளக்கு? என்றால் அதுதான் “கடவுள் நம்பிக்கை” என்கின்றார் அவர்.

ஒரு ஆள் எதையோ தொலைத்து விட்டு வீட்டுக்குள்ளே தேடிக்கிட்டிருந்தார். என்ன தேடுகின்றீர்கள் என்ற கேட்டார் மனைவி.

பேனாவைத் தொலைத்து விட்டேன்! என்றார் அவர்.

எங்கே தொலைச்சீங்க! என்று கேட்டார். சினிமா தியேட்டர்லே! என்றார் அவர்.

சினிமா தியேட்டர் உள்ளே தொலைத்து விட்டு வீட்டுக்குள்ளே வந்து தேடினால் கிடைக்குமா? என்றார். அதற்கு அவர். விவரம் தெரியாமல் பேசாதே. அங்கே ஒரே இருட்டா இருக்கு. எப்படி தேடமுடியும்? அதுதான் வெளிச்சம் உள்ள இடமாகப் பார்த்துத் தேடிக்கிட்டிகொண்டிருக்கேன்! என்றார்

இதற்கு என்ன அர்த்தம்? அவருக்கு விதியும் சரியில்லை மதியும் சரியில்லை என்று அர்த்தம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்நடைகளின் உயிரைக் குடிக்கும் பொலித்தீன்


## கால்நடை வளர்ப்பு - பகுதி - 01

அண்மை நாட்களாக பொலித்தீனை உண்ட கால் நடைகளை அடிக்கடி சிகிச்சையளிக்க வேண்டியுள்ளது. நகர்ப் புறங்களில் வீசியெறியப்படும் பொலித்தீன் பைகளில் சுற்றப்பட்ட (lunch sheet) உணவுகளை உண்ணும் கால்நடைகளின் அசையூண் இரப்பை அடைபட்டு அவை உணவு உண்ண முடியாது பாதிக்கப்படுகின்றன. முறையான கழிவுகளை அகற்றும் பழக்கமில்லாத வளர்முக நாடுகளில் இதுவொரு பாரிய பிரச்சனையாகும். மேய்ச்சல் தரைகள் இல்லாததாலும் கால்நடை உணவுகளின் தட்டுப்பாட்டாலும் விலை உயர்வாலும் பல உரிமையாளர்கள் கால்நடைகளை திறந்து விடுகின்றனர். அந்தக் கால்நடைகள் வீதி ஓரங்களிலும் கைவிடப்பட்ட நிலங் களிலும் வளர்ந்து காணப்படும் புற்களையும் ஏனைய கழிவு களையும் உண்கின்றன. இதன் போது வீதிகளிலும் குப்பைத் தொட்டிகளிலும் வீசியெறியப்படும் உணவுக் கழிவுகளுடன் சேர்ந்து காணப்படும் பொலித்தீனையும் சேர்த்து உண்கின்றன.

பொலித்தீன் உக்குவதோ சமிபாடடைவதோ கிடையாது. தொடர்ச்சியாக அசையூண் இரப்பையில் சேரும் பொலித்தீன் பொருட்கள் முறுகி கற்கள் போல மாறி உணவு செல்லும் வழிகளை அடைத்து விடுகின்றன. அசையூண் இரப்பையின் சுருங்கி விரியும் தன்மை (Rumenmotility) பாதிக்கப்படுகிறது. சமிபாட்டுத் தொகுதியின் ஏனைய பகுதிகளுக்கு உணவு கடத்தப்படாது தேங்கிவிடுகிறது. ஊட்டச்சத்துக்களும் அகத்துறிஞ்சப்படாது. இந்தக் கூட்டு விளைவுகளால் வயிற்றுப்பகுதி வீங்கி அவை உணவு உட்கொள்வதை தவிர்த்து மரணிக்கின்றன. சில நேரங்களில் நோய்த்தொற்றும் நஞ்சாதலும் (Toxemia) ஏற்படுகிறது.

**பொலித்தீன் அடைப்பின் அறிகுறிகள்**

1. தொடர்ச்சியாக நிறை குறையும்
2. சிறிது சிறிதாக உணவைக் குறைக்கும் . ஒரு கட்டத்தில் முற்றாக உணவு உண்பதை நிறுத்திவிடும்
3. பாலுற்பத்தி குறையும்
4. வயிறு வீங்கிக் காணப்படும் (Bloat)
5. மாடு சோர்ந்து போய்விடுவதுடன் ( letargy) அதிகளவு நீர்ச் சத்து இழப்பை அவதானிக்க முடியும்.( severe dehydration)
6. மிகக் குறைவாக .இறுகிய நிலையில் சாணி போடும். சில வேளைகள் சளி போன்ற பொருள் ( Mucus) சாணியில் காணப்படும்.
7. அசையூண் இரப்பையின் அசைவு குறையும் அல்லது இருக்காது (complete rumen stasis)



**இந்த நிலையை எவ்வாறு கண்டறிவது?**

1. கால்நடையின் பழக்கவழக்கம். (குப்பைகளை மேய்வது . வீதிகள் மற்றும் நகரங்களில் மேயும் இயல்பு)
2. வெளித்தோற்றம் (வயிறு வீங்குதல், ஏனைய அறிகுறிகள்)
3. சத்திர சிகிச்சை.( சில வேளைகள் அனுமானத்தின் அடிப்படையில்தான் சத்திர சிகிச்சை செய்ய வேண்டும்- Exploratory laparotommy)/)
4. x ray/ ultrasonography (இலங்கையின் களச் சிகிச்சையில் இதற்கான சாத்தியம் மிக மிகக் குறைவு)

**சிகிச்சைகள்**

1. சத்திரசிகிச்சை ( Ruminotomy) செய்து பொலித்தீன் பொருட்களை எடுத்தல்.
2. குளுக்கோஸ் .Normal saline மூலமான நீர்ச்சத்து மற்றும் சக்தி இழப்பை ஈடு செய்யும் சிகிச்சை (Fluid therapy). நுண்ணுயிர் கொல்லிகளை வழங்குதல். ஊட்டச்சத்துக்களை வழங்குதல்.

கடந்த சிலநாட்களாக வவுனியா மற்றும் பருத்தித்துறைப் பகுதிகளில் பொலித்தீன் அசையூன் .இரைப்பையில் அடைபட்டிருந்த கால் நடைகளில் சத்திர சிகிச்சை மூலம் அவற்றை அகற்ற முடிந்தது. அவை நகரங்களில் மேயும் பழக்கமுடைய கால்நடைகள். கால்நடைகள் பொலித்தீனை உண்ணும் போது, இரைப்பைப் பகுதியில் வெளியேற முடியாது சிக்கி விடுகிறது. இறுதியில் அது அவற்றின் உயிரையும் பறிக்கிறது. நகர்ப்புறங்களில் மேயும் சகல கால்நடைகளும் நிச்சயம் கணிசமான அளவு பொலித்தீனை, இரைப்பையில் கொண்டிருக்கும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. தயவு செய்து பொலித்தீனுடன் உணவை கண்டபடி எறியாதீர்கள். அது அப்பாவி கால்நடைகளில் உயிரைக் குடிக்கும் எமனாகும்.



Dr. எஸ்.கிருபானந்தகுமாரன் (MVSc)
கால்நடை வைத்தியர்.

**இதனைத் தடுப்பது எவ்வாறு?**

1. குப்பைகள் போடுதல் தொடர்பான. விழிப்புணர்வு மக்களுக்கு அவசியம் தேவை. வீதிகளில் அவற்றை வீசாமல் அதற்குரிய பொருத்தமான இடத்தில் போட வேண்டும். அந்த இடங்கள் கால்நடைகள் செல்லமுடியாத வகையில் பாதுகாப்பிடப் பட வேண்டும்.

2. கால்நடைகள் வீதியிலும் நகரங்களுக்குள்ளும் உணவு தேடிச் செல்வதை தடுக்க வேண்டும். அவற்றுக்குரிய உணவு வழிகள் உறுதி செய்யப்பட வேண்டும். தாம் வளர்க்கும் கால்நடைகளுக்கு உணவிடமுடியாதவர்கள் அவற்றை வளர்ப்பதை கைவிட வேண்டும்.

3. சூழலியல் சட்டங்களை இறுக்கமாக நடைமுறைப்படுத்தல். அத்துடன் சூழலை மாசுபடுத்துவதும் விலங்குகளின் உயிரைப் பறிக்கும் பொலித்தீனை தடை செய்ய வேண்டும்.

வருமுன் காப்பதுதான் சிறந்தது. இது பொலித்தீனுக்கும் பொருந்தும்.

# நடைபவனி

(வவுனியா)

வவுனியா இறம்பைக் குளம் மகளிர் மகா வித்தியாலயம் 135 ஆவது ஆண்டினைக் கொண்டாடும் முகமாக பாடசாலை நிர்வாகத்தின் அனுசரணையோடு பழைய மாணவிகளின் ஏற்பாட்டிலும் நடைபவனி இடம்பெறவுள்ளது.

இன்று சனிக்கிழமை பாடசாலை முன்றலில் இருந்து ஆரம்பமாகும் நடைபவனி வவுனியா மணிக்கூட்டுக் கோபுரம் சென்று அங்கிருந்து கடைவீதி வழியாக அந்தோனியார் ஆலயத்தை சென்றடைந்து பாடசாலை பிரதான வாயிலை சென்றடையவுள்ளது.

நாளை மறுதினம் விளையாட்டு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதுடன் 16 ஆம் திகதி கலாசார நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில் பழைய மாணவர்கள், பெற்றோர்கள் மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். (8-280)

லங்கா மஹால் (PVT) LTD
DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.
(4963)
UK-1350, Australia-2050, Canada-2550, India-1490, Germany-1990, Italy-2250, Swiss-2480, France-2180
WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
தொடர்புகளுக்கு
077 839 3974, 076 889 1308

யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
பொதுக்கூட்டம்
யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம் 24.08.2025 ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறும்
பழைய மாணவர் சங்கத்தின் உறுப்புரிமை கொண்ட உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.
Secretary
Old students Association
J/Kodikamam Thirunavukkarasu C.C
(C -3603)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 4

காவியத் தொடர் 840





"பூர்வ ஜென்மங்களைப் பற்றி இப்போது யாருக்கு என்ன கவலை? இந்த ஜன்மத்தைப் பற்றி ஏதாவது நல்ல செய்தி இருந்தால் சொல்லு!" என்றான் சேந்தன் அமுதன்.

"முந்தைப் பிறவிகளின் சொந்தம் இந்தப் பிறவியிலும் தொடரும் என்று சொல்லுகிறார்கள் அல்லவா? அது உண்மையாகத்தான் இருக்க வேண்டும் இன்று உச்சி வேளையில் உன்னைப் பிரிந்த போது இனி உன்னைப் பார்க்கப் போவதே இல்லை என்று எண்ணினேன். இரண்டு நாழிகைக்குள்ளாக உன்னை மறுபடி பார்க்கும்படி நேர்ந்தது."

"அதற்காக வருத்தப்பட வேண்டாம் இந்தக் காட்டு வழியைக் கடந்து தஞ்சாவூர்ச் சாலையை அடைந்ததும் நான் என் வழியே செல்வேன், நீ உன்னிஷ்டம் போல் போகலாம்"

"உன்னை நான் அப்படித் தனியே விட்டுவிடப் போவதில்லை. அண்ணியைக் கண்டு பேசிய பிறகு உனனுடன் நான் தஞ்சாவூருக்கு வரப்போகிறேன். என் அத்தைக்கு நேர்ந்த துன்பத்துக்கு பரிகாரம் தேடப் போகிறேன். சோழ சக்கரவர்த்தியின் சந்நிதானத்தில் சென்று முறையிடப் போகிறேன்"

"பூங்குழலி சக்கரவர்த்தியின் சந்நிதானத்தை அடைவது அவ்வளவு எளிது என்று கருதுகிறாயா? நம் போன்றவர்கள் தஞ்சாவூர்க் கோட்டைக்குள்ளேயே பிரவேசிக்க முடியாதே?"

"ஏன் முடியாது? கோட்டைக் கதவு திறக்காவிட்டால் கதவை உடைத்துத் திறப்பேன்! அது முடியாவிட்டால் மதிள் சுவரில் ஏறிக் குதித்துக் போவேன்"

"அரண்மனை வாசலில் காவலிருக்கும் சேவகர்களை என்ன செய்வாய்?"

"நான் போடுகிற கூச்சலைக் கேட்டு அவர்கள் மிரண்டு போய் என்னைச் சக்கரவர்த்தியிடம் அழைத்துப் போவார்கள்"

"சின்னப் பழுவேட்டரையரை அப்படியெல்லாம் மிரட்டி விட முடியாது. அவருடைய அனுமதியில்லாமல் யமன் கூடச் சக்கரவர்த்தியை அணுக முடியாது என்று தஞ்சாவூர்ப் பக்கங்களில் ஜனங்கள் பேசிக் கொள்வது வழக்கம். அதனாலேதான் சக்கரவர்த்தி இன்னும் உயிரோடிருக்கிறார் என்று சிலர் சொல்லுவதையும் கேட்டிருக்கிறேன்."


"சக்கரவர்த்தியைப் பார்க்க முடியாவிட்டால், பழுவேட்டரையர்களையே பார்த்து இந்த அக்கிரமத்துக்குப் பரிகாரம் உண்டா, இல்லையா என்று கேட்பேன்! அவர்கள் தக்க பரிகாரம் செய்யாவிட்டால், முதன் மந்திரி பிரம்மராயரிடம் போவேன். அதிலும் பயனில்லாவிட்டால், பழையாறையிலுள்ள ராணிகளிடம் போய் முறையிடுவேன். என் அத்தையின் கதி என்ன ஆயிற்று என்று தெரிந்து கொள்ளும் வரையில் ஓரிடத்தில் தங்கமாட்டேன். அவளுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்குப் பரிகாரம் கிடைக்கும் வரையில் இரவு பகல் தூங்க மாட்டேன். அண்ணி என் அத்தையை 'ஊமைப் பிசாசு' என்று சொன்னாள் அல்லவா? நானும் ஒரு பிசாசாக மாறி நாடு நகரமெல்லாம் சுற்றி அலைவேன். 'நீதி!' 'நீதி' என்று அலறிக் கொண்டு அலைந்து திரிவேன் அமுதா நீயும் என்னோடு வருவாயா?"

(தொடரும்...)



## சிறுவர் அரங்கம்

# புலிக்குப் புலி



(நேற்றைய தொடர்ச்சி)

இதனை விட பிரமாண்டமாயும், கம்பீரமாயும் நின்று கொண்டிருந்தது அது. பெரிய திண்டின் மேலே நின்று கொண்டிருந்தது. பார்த்தவுடனே பயந்து விட்டது. அம்மாடியோவ் நம்மை விட பெரிய தாய் இருக்கிறது. ஒரே அடியில் என்னை அடித்து விடும் போல் இருக்கிறதே. ஆச்சர்யத்துடன் சற்று தள்ளி நின்றே பார்த்து கொண்டிருந்தது.

இனி இந்த காட்டில் என்னை யாரும் மதிக்க மாட்டார்கள். இனிமேல் இதுதான் ராஜா. மனதுக்குள் துக்கம் கவிழ திரும்பவும் காட்டுக்குள் நடந்து சென்றது.

இப்பொழுதெல்லாம் புலியார் மிகவும் சோகமாகவே காணப்பட்டார். எல்லாம் என் தலை விதி. அந்த புலி ஒரு நாள் என்னையும்,இந்த காட்டை விட்டு விரட்ட போகிறது. மனதுக்குள் கவலையுடனே நாட்களை ஓட்டியது.

ஒரு நாள் நல்ல மழை பிடித்துக்கொண்டது. இடைவிடாத மழை. மூன்று நாட்களுக்கு பெய்தது. எல்லா மிருகங்களும், மழைக்கு பயந்து குகைகளில் பதுங்கிக் கொண்டன. புலியார் அந்த மழையிலும் பசி தாங்காமல் ஏதாவது ஒன்றை வேட்டையாட வெளியே வந்தது. நல்ல மழை காரணமாக எல்லா மிருகங்களும் பதுங்கிக் கொண்டதால் இதற்கு ஒன்றுமே கிடைக்கவில்லை. அப்படியே நடந்து நடந்து காட்டு எல்லை வரை வந்து விட்டது.

வந்து பிறகு தான் அதற்கு ஞாபகம் வந்தது, அட்டா நம்முடைய விரோதி இங்கொருவன் இருக்கிறானே என்று. சற்று பயத்துடன் அன்று அந்த புலி நின்று கொண்டிருந்த இடத்தை பார்த்தது. என்ன ஆச்சர்யம் அங்கு புலி இல்லை. வெறும் திண்டு மட்டும்தாம் இருந்தது. சுற்றிலும் மண்தான் சகதியாய் கிடந்தது.

இதற்கு ஒரே ஆச்சர்யம், அந்த புலி எங்கே? சுற்று முற்றும் பார்த்தது. புலி அங்கு இருப்பதற்கான அறிகுறிகள் தென்படவே இல்லை. அந்த மழையிலும் புலிக்கு ஒரே ஆனந்தம். அப்படியானால் நம்முடைய விரோதி இந்த மழைக்கு பயந்து ஓடி விட்டான். ஆஹா... மகிழ்ச்சியில் அதற்கு பசியே மறந்து போயிற்று. அதே நேரத்தில் நகரத்தில் காட்டிலாகாவின் அலுவலக அறையில் ஒருவன காவலர், குறை ஒன்றை அதிகாரியிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

"சார் நாம் இது புலிகள் இருக்குமிடம் அப்படீன்னு காட்டறதுக்காக வச்சிருந்த புலி பொம்மை, இந்த மழையில கரைஞ்சு போயிடுச்சு. புதுசா ஒரு மண் பொம்மையை கொண்டு போய் வைக்கணும்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஷ்டத்தை அனுபவிக்காமல் எந்தவொரு மனிதரும் அவரது இலட்சியத்தை அடைய முடியாது.
– கர்மவீரர் காமராஜர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஆடு மேய்க்கும் சிறுவர்களுடன் கலந்துரையாடிய காமராஜர்

தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த கர்ம வீரர் காமராஜர் இலவசக்கல்வியின் தந்தை எனப் போற்றப்படுபவர்.

தமிழகத்தில் அவர் ஆரம்பித்த இலவசக் கல்வித் திட்டமே இன்றைய தமிழகத்தின் எழுச் சிக்குக் காரணமாயிற்று.

ஆம், தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த காமராஜர் விவசாயத்துக்கும் கல்விக்கும் ஆற்றிய பணியை எந்த முதலமைச்சரும் இதுவரை செய்யவில்லை.

இதனாலேயே காமராஜர் முதலமைச்சராக இருந்த காலம் பொற்காலம் எனப் போற்றப்படுகிறது.

தமிழகத்தில் இலவசக் கல்வியைப் போதிப்பதற்காக ஊர்கள் தோறும் பாடசாலைகளை காமராஜர் ஆரம்பித்தார்.

எனினும் அவர் எதிர்பார்த்த அளவில் மாணவர்கள் பள்ளிக்கு வரவில்லை. இதனால் அவர் வேதனையுற்றார்.

ஒருநாள் அரச பணி நிமித்தம் காமராஜர் காரில் சென்று கொண்டிருக்கிறார்.

அது ஒரு வயல் வெளி. அங்கு சிறுவர்கள் ஆடு மேய்த்துக் கொண்டிருக்கிறார்கள். உடனே காரை நிறுத்திய கர்மவீரர் அந்த சிறுவர்களை நோக்கிச் செல்கிறார்.

ஆடு மேய்க்கும் சிறுவர்களைப் பார்த்து; பிள்ளைகாள் நீங்கள் இன்று பள்ளிக்குப் போகவில்லையா? என வினவுகிறார். இல்லை என்பது சிறுவர்களின் பதிலாகிறது.

ஏன் பள்ளிக்குப் போகவில்லை. முதலமைச்சர் அந்தச் சிறுவர்களிடம் கேட்கிறார். அதற்கு சிறுவர்கள் ஆடு மேய்த்தால் தானே சோறு கிடைக்கும். பள்ளிக்குப் போனால் யார் சோறு தருவார்கள்.

அந்தச் சிறுவர்களின் பதிலால் காமராஜர் கலங்கிப் போகிறார்.

மீண்டும் நடந்து சென்று காரில் ஏறுகிறார். கார்ச் சாரதியிடம் காரைஅலுவலகத்துக்கு திருப்புமாறு கூற, கார் முதலமைச்சரின் அலுவலகத்தை அடைகிறது.

உயர் அதிகாரிகள் அழைக்கப்படுகிறார்கள். பாடசாலைகளில் மாணவர்களுக்கு இலவச மதிய உணவு வழங்க வேண்டும் எனக் கட்டளையிடுகிறார் காமராஜர்.

அவரின் கட்டளை அமுலாகிறது. பாடசாலைகளில் மாணவர்கள் குவிகிறார்கள்.

அன்று ஆடு மேய்க்கும் சிறுவர்களிடம் கதைத்ததன் காரணமாக தமிழகத்தின் இலவசப் பாடசாலைத் திட்டம் பூரண வெற்றி கண்டது.

இப்போது இது எதற்காக? என்று நீங்கள் கேட்கலாம். எங்கள் வட மாகாணத்தில் வீழ்ச்சி கண்ட கல்வியை உயர்த்துவதாயின் நெடுந்தீவு, அனலைதீவு, எழுவைதீவு, நயினாதீவு உள்ளிட்ட தீவகத்துக்குச் சென்று அங்கு கற்கின்ற மாணவர்களுடன் இருந்து கதைக்க வேண்டும். அப்போது அந்த மாணவர்கள் தங்கள் கல்வி எப்படி என்பதை மிகத் தெளிவாக எடுத்துக் கூறுவார்கள்.

இதை விட்டு விட்டு புலம்பெயர் நாடுகளில் ஓய்வு பெற்றுவிட்டு, இங்கு கௌரவத் தேவைக்காக வந்திருப்பவர்களின் ஆலோசனையில் கல்வியை உயர்த்தலாம் என்றால், வறுமை ஒழிப்புக்கு தாஜ்சமுத்திராவில் ஆலோசனைக் கூட்டம் நடத்திய கதையாகத்தான் நிலைமை முடியும். கவனம்.

## முகாமிற்கு வருகை தருமாறு கூறி ஐவர் மீது இராணுவம் தாக்குதல்

### ஒருவர் காணாமல் போயுள்ளார் முத்தையன் கட்டில் சம்பவம்

முத்தையன் கட்டுக் குளம் இடதுகரை இராணு முகாமிற்கு வருகை தருமாறு கூறி விட்டு ஐவர் மீது இராணுவம் தாக்குதல் நடத்தியுள்ளது.

அதில் ஒருவர் நேற்றுக் காணாமல் போயுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

குறித்த இராணுவ முகாம் ஒரு சில நாட்களில் விடுவிக்கப்பட இருப்பதாக தகவல் வெளியாகியுள்ள நிலையில் அவ் இராணுவ முகாமிலுள்ள கட்டிடங்களை அகற்றும் நடவடிக்கையை இராணுவத்தினர் மேற்கொண்டு வருகிறார்கள். இந்நிலையில் தகரங்கள் தருவதாகக் கூறி அப் பகுதியில் இளம் குடும்பஸ்தருக்கு இராணுவ வீரன் ஒருவரால் தொலைபேசியில் நேற்று முன்தினம் இரவு கூறப்பட்டுள்ளது.

அதனையடுத்து நேற்று முன்தினம் இரவு ஐவர் அங்கு சென்றுள்ளனர். இராணுவ முகாமிற்கு சென்ற இளைஞர்களுக்கு தடிகள், கம்பிகளால் இராணுவத்தினர் துரத்தித் துரத்தி தாக்கியுள்ளனர். குறித்த இராணுவ முகாமிற்கு பின்பகுதியாக உள்ள குளம் வரை துரத்தித் துரத்தி தாக்கியுள்ளனர்.

அதனால் என்ன செய்வதென்று தெரியாது இராணுவ முகாமிற்கு பின்பகுதியாக ஓடி தப்பி வந்ததாகவும் 20 ற்கு மேற்பட்ட இராணுவத்தினர் தாக்கியதாகத் தாக்குதலுக்கு இலக்காகிய இளைஞன் ஒருவர் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் இராணுவ முகாமிற்குச் சென்ற ஐந்து நபர்களில் நால்வர் திரும்பி வந்துள்ள நிலையில் ஒருவர் மாயமாகியுள்ளார்.

மாயமாகிய குறித்த இளைஞர் தப்பி ஓடும் போது இராணுவ முகாமிற்கு பின்பகுதியாக உள்ள முத்தையன் கட்டுக் குளத்தின் பின்பகுதியில் வீழ்ந்திருக்கலாம் என்ற சந்தேகத்தில் அப்பகுதி கிராம மக்கள் நீரில் இறங்கி வலை விட்டு தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர். இதுவரை குறித்த நபர் கிடைக்கவில்லை.

இந் நிலையில் குறித்த காணாமல்போன இளைஞனின் சகோதரரால் குறித்த சம்பவம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாக சகோதரர் தெரிவித்திருந்தார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஒட்டுசுட்டான் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த சம்பவத்தில் முத்தையன் கட்டில் வசிக்கும் எதிர்மன்னசிங்கம் கபில்ராஜ் என்ற 32 வயதுடைய ஏழு மாத குழந்தையின் தந்தையே காணாமல்போயுள்ளமை குறிப்பிடதக்கது.(ம-7,299)

## நீச்சல் போட்டியில் சிறுவன் சாதனை

(கொழும்பு )

கொழும்பு சென் பெனடிக்ட் கல்லூரியின் இரண்டாம் தர மாணவரான தினேஷ் ஹெதாவ், 50 மீற்றர் நீச்சல் போட்டியில்புதிய உலக சாதனை படைத்துள்ளார்.

நேற்று முன்தினம் (7) கல்லூரி நீச்சல் தடாகத்தில் இச் சாதனை படைக்கப்பட்டது. ஐக்கிய அரபு எமிரேட்ஸை சேர்ந்த சிறுவன் ஒருவரால் நிகழ்த்தப்பட்ட முன்னைய சாதனையான ஒரு நிமிடம் 6 வினாடிகள் என்ற சாதனையை 49 வினாடிகளில் குறித்த சிறுவனால் முறியடிக்கப்பட்டது.

மேலும், இந்தச் சாதனையானது "சோழன் உலக சாதனைப் புத்தகம் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட ஒரு உலக சாதனையாகப் பதிவு செய்யப்பட்டது. (ம-7)

## குளவி கொட்டியதில் தொழிலாளி உயிரிழப்பு

(மாத்தளை)

மாத்தளை மாவட்டம் நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆல்டன் தேயிலைத் தோட்டத்தின் கிங் கோராப் பிரிவில் வசிக்கும் 36 வயதுடைய தோட்டத் தொழிலாளி ஒருவர் குளவித் தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இவர் தனது வீட்டிற்கு குடிநீர் வழங்கும் உடைந்த குழாயை சரிசெய்யச் சென்றபோது அந்த நபர் குளவி தாக்குதலுக்குள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தையடுத்து உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக டிக்கோயா ஆதார வைத்தியசாலையிலுள்ள மருத்துவ பரிசோதகர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

நோர்வூட் பொலிஸார் சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## திருகோணமலை குச்சவெளியில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

(திருகோணமலை)

திருகோணமலை குச்சவெளிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திரியாய் 05ம் வட்டாரத்தில் ஆண் ஒருவரின் சடலமொன்று நேற்று வெள்ளிக்கிழமை (08) மீட்கப்பட்டுள்ளது.

சடலம் யாருடையது என்பது பற்றி இன்னும் இனங்காணப்படவில்லை எனவும் சடலம் இனங்காண முடியாத நிலையில் இருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சடலத்தை பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்படவுள்ளது. (ம-7)

## திருநாட்களில் கட்டுப்பாட்டுடன் ஒலி பெருக்கியைப் பயன்படுத்துக

(யாழ்ப்பாணம்)

கத்தோலிக்கத் தேவாலயங்களில் திருநாட்களின் போது ஒலிபெருக்கியைக் கட்டுப்பாட்டுடன் பயன்படுத்துமாறு யாழ்.மறைமாவட்ட குரு முதல்வர் அருட்பணி ப.யோ.ஜெபரட்ணம் அடிகளார் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

அவர் அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஆலய வழிபாடுகளின் போது பயன்படுத்தப்படும் ஒலிபெருக்கி சாதனங்களினால் ஆலய சுற்றாடலில்வாழும்மாணவர்கள், பாடசாலைகள், நோயாளர்கள், வயோதிபர் ஆகியோருக்கு ஏற்படும் இடையூறுகளைத் தவிர்க்க பின்வரும் ஒழுங்குகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும். நாட் திருப்பலிகள், ஞாயிறு திருப்பலிகளின் போது ஆலயத்திற்கு உள்ளே மட்டும் கேட்கும் படியாகவும் திருநாட் காலங்களில் ஆலய வளாகத்துக்குட்பட்டதாகவும் ஒலி பெருக்கிகள் பயன்படுத்தப்பட வேண்டும்.

யாழ்.மாவட்ட செயலர் கூட ஒலிபெருக்கிப் பயன்பாட்டில் கோவில்கள், ஆலயங்களில் கட்டுப்பாட்டினைப் பேணுமாறு வலியுறுத்தியுள்ளார். தற்போது ஒலி பெருக்கிப் பாவனை யாழ்.திரு அவையினுடைய பிரச்சினையாக மட்டுமல்லாது ஒலியால் சூழல் மாசடைதல் எனும் சமூக தீமையாக மாறி விட்டதால் இச் சமூக சீர்திருத்தச் செயலைச் செய்வதற்கு அனைத்துக் குருக்களும் துறவிகளும் பொது நிலையினரும் முழுமையான ஒத்துழைப்பை வழங்கி வீதிகளில் ஒலிபெருக்கி பாவிப்பதை முற்றாகத் தவிர்க்க உதவுமாறும் மேற்படி மாநாட்டுத் தீர்மானத்தை இறுக்கமாகக் கடைப்பிடிக்குமாறும் கண்டிப்பாகக் கேட்டுக்கொள்கின்றேன் என யாழ்.மறைமாவட்டக் குருமுதல்வர் வேண்டியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொசாட் 33

சொக்கன்

ஆக இஸ்ரேல் எகிப்தை அடிக்கவேண்டுமென்றால் முதலில் அவர்களுடைய விமானப் படையை முடக்க வேண்டும். அதைப் பார்த்து அவர்கள் அதிர்ந்து நிற்கும்போது சண்டையை நமக்குச் சாதகமாகத் திருப்பிவிடலாம்!

ஆனால் எகிப்து விமானங்கள் மிகப் பிரமாதமான தொழில்நுட்பங்களைக் கொண்டவை. இஸ்ரேல் நாட்டுப் பேப்பர் ராக்கெட்களை வைத்துக் கொண்டு இந்த விமானங்களை எப்படி அழிக்கமுடியும்?

இங்கேதான் மொசாடின் புத்திசாலித்தனம் வெளிப்பட்டது. எகிப்தில் எங்கெல்லாம் போர் விமானங்கள் நிறுத்திவைக்கப்படிருக்கின்றன. இவற்றை இயக்குகிற விமானிகள் யார்? அவர்களுக்குக் கட்டளையிடுகிற அதிகாரிகள் எங்கே உட்கார்ந்திருக்கிறார்கள்.

இந்தப் பார்ட்டிகளுக்கு ஏதாவது பலவீனம் உண்டா? மது, மாது, வேறு சில வற்றிற்க்கும் மயங் குவார்களா? தினந் தோறும் எத்தனை மணி க்கு இந்த விமானங் கள் தயார் நிலையில் இருக்கும் ? அவற்றுக்கு எரிபொருள் நிரப்புகிற நேரம் என்ன ஒவ்வொரு விமான நிலையமும் எப்போது மிகப் பர பரப்பாக இருக்கும்? எப்போது தூங்கி வழியும் என்று சகல விபரங்களையும் திரட்டி இஸ் ரேலுக்கு அனுப்பி வைத்தார்கள்.

இஸ்ரேல் ராணுவம் இந்தத் தகவல்களை மேலோட்டமாகப் புரட்டிப்பார்த்தது. அப்படியே ஆடிப் போய் விட்டார்கள். எகிப்து இராணுவத்துக்கே கூட அவர்களுடைய விமான நிலையங்களைப் பற்றி இத் தனை நுணுக்கமான விபரங்கள் தெரிந்திருக் காது. மொசாட்டுக்கு எப்படி இதெல்லாம் தெரிய வந்தது?

அதெல்லாம் தொழில் ரகசியம் என்றது மொசாட். இப்போ நீங்க எதுவும் பேசவேண்டாம் ஒழுங்காக நாங்க சொல்றதை மட்டும் கேளுங்க.



சரி சொல்லுங்க நாம் என்ன செய்ய வேண்டும்?

பெரும்பாலான எகிப்து விமான நிலையங்கள் காலை எட்டு மணிக்கு ரொம்பச் சுறுசுறுப்பா இருக்கும். எங்கே பார்த்தாலும் விமானங்கள் அதுக்கு எரிபொருள் நிரப்புற வண்டிகள் பறப்பதற்கு ரெடியாகி கொண்டிருக்கிற விமானிகள் என்று எல்லோரும் அவரவர் வேலையில பிஸியா இருப்பாங்க அந்த நேரம் பார்த்து நீங்கள் அதிரடியாகத் தாக்கினால் கொஞ்ச நேரத்துக்குள்ள நிறைய சேதம் உண் டாக்கிடலாம்.

ஒருவேளை அவங்களும் பதிலுக்குத் தாக்க ஆரம்பிச்சா?

கவலையே படாதீங்க அந்த நேரத்தில நூற்றுக்குத் தொன்ணூறு அதிகாரிங்க ஆஃ பீசுக்கே வந்திருக்க மாட்டார்கள். இல்லை என்றால் பக்கத்து கன்டீன்ல அரட்டை அடித்துவிட்டு காப்பி, மசால்வடை சாப் பிட்டுகிட்டிருப்பாங்க. அவங்களுக்கு முழிப்பு வந்து விமாகளுக்குக்கட்டளை போட்டு நம்மைத் திரும்பித் தாக்குவதற்குள்ள நாம அடித்த விளாசி விட் டுத் திரும்பி வந்துடலாம்.

முதன்முறையாக இஸ்ரேல் ராணுவத்தினருக்கு எகிப்தை ஜெயித்துவிடமுடியும் என்று நம்பிக்கை வந்தது. ஒரு நல்ல உளவு நெட்வோர்க்கின் பலம் எப்பேர்ப் பட்டது என்று அனுபவப் பூர்வமாகப் புரிந்து கொண்டார்கள்.

சரி நாங்க கரெக்டா எத்தனை மணிக்குப் புறப்பட வேண்டும்?

ஏழே முக்காலுக்குக் கிளம்புங்கள் என்று முகூர்த்த நேரம் குறித்துக் கொடுத்தது மொசாட். சரியா எட்டு மணிக்கு அவர்களை அடிக்க ஆர ம்பிக்க வேண்டும் அவ்வளவு தான்.

*1967*ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5ஆம் திகதி இஸ்ரேல் பிரதமர் லெவி இஷ்கல் எகிப்தின்மீது தாக்குதல் நடத்த உத்தரவிட்டார். சரித்திரத்தில் ஆறு நாள் போர் என்று வர்ணிக்கப்படும் அதிவேக யுத்தம் தொடங்கியது.

அன்றைய தினம் எகிப்தை நோக்கி விரைந்த இஸ்ரேல் விமானங்கள் மிகத் துல்லியமாக 8.01 இற்குத் தாழ்வாகக் கீழே பறந்தன. அடிக்க ஆரம்பித்தார்கள்.

மொசாட் சொன்னதுபோலவே எகிப்து விமானிகள் ராணுவத்தினர் யாரும் இந்தத் திடீர் தாக்குதலைச் சமாளிக்கக்கூடிய நிலைமையில் இல்லை. அவர்கள் சுதாரித்தக்கொள்வதற்குள் எகிப்து விமானங்கள் எரிபொருள் நிரப்புகிற வண்டிகளை இஸ்ரேல் குண்டு வரிசையாகத் தகர்க்க ஆரம்பித்தன. இவை ஒவ்வொன்றும் பிரம்மாண்டமாக வெடித்துச் சிதற எக்ஸ்ட்ரா லார்ஜ் சேதம்.

சில நிமிடங்களுக்கள் நூற்றுக்கணக்கான எகிப்து விமானங்கள் வீரர்களை அழித்து விட்டது இஸ்ரேல். அப்போதே இந்தப் போரில் வீரர்களை அழித்துவிட்டது இஸ்ரேல். அப்போதே இந்தப் பேரில் யார் ஜெயிக்கப்போகிறார்கள் என்பதும் உறுதியாகிவிட்டது.

அப்போதைய எகிப்து ஜனாதிபதி கமால் அப்துல் நாசர் இத்தனைன பிரமாதமான தனது விமானப் படை இப்படிக் கண்சிமிட் டும் நேரத்துக்குள் உடைத்து எறியப் பட்டுவிட்டதை அவரால் ஜீரணித்துக் கொள்ள முடிய வில்லை.

அவ்வளவு ஏன்? இஸ்ரேக்குள்ளேயே பலரால் இந்த வெற்றியை நம்பமுடியவில்லை. எல்லோரும் மொசாட்டின் தீர்க்க தரிசனத்தை எண்ணி வியந்து கொண் டிருந் தார்கள்.

உண்மையில் இது தீர்க்க தரிசனம் இல்லை. பல மாதங்கள் பொறுமையாக உட்கார்ந்து தகவல் திரட்டியதன் பலன் அந்தத் தகவல்களை ஒழுங்காக அலசி அதனைச் சரியான நேரத்தில் சரியான இடத்தில் பயன் படுத்தினால் அதன் மூலம் மிகப் பெரிய வெற்றிகளை பெற முடியும் என்று சாட்சியுடன் நிரூபித்துவிட்டது மொசாட்.

ஒரு வேளை அந்த ஜூன் 5ஆம் திகதி இஸ்ரேலிய ராணுவம் ஜஸ் ட்கால் மணிநேரம் தாமதாகப் புறப் பட்டிருந்தால் கூட எகிப்து விமானங்கள் அனைத்தும் தயார் நிலையில் இருந் திருக்கும். அதிகாரிகள் மசால் வடையைத் தின்று ஏப்பம் விட்ட கையோடு இஸ்ரேல் விமானங்களை நடு வானத்தில் கொளுத் திச் சொக்கப் பானை கொண்டாடி இருப் பார்கள். ஒட்டு மொத் தப் போரும் எகிப்துக் குச் சாதகமாகத் திசை மாறியிருக்கும்!

ஆறுநாள் போரில் இஸ்ரேல் பெற்ற வெற்றிகளுக்கு அவர்களுடைய உளவுத்துறை பலம் ஒரு மிக முக்கியமான காரணம். இதன் மூலம் மொசாட் நினைத்தால் எங்கேயும் ஊடுருவ முடியும். எப்பேர்ப்பட்ட எதிரியின் பலவீனங்களையும் கண்டு பிடித்துத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்பது உறுதியாகி விட்டது.

(தொடரும்....)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## புத்தூரில்...

மேற்படி இளைஞரும் அவரது நண்பரும் மோட்டார் சைக்கிளில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை (07) இரவு புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற கரப்பந்தாட்டப் போட்டியைப் பார்த்துவிட்டு வீடு திரும்பிக்கொண்டு இருந்தபோது புத்தூர்ச் சந்தியில் இருந்து பருத்தித்துறை வீதிப் பக்கமாக உள்ள வளைவில் எதிர்ப்பக்கம் இருந்த கம்பத்துடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானது.

இதில் படுகாயமடைந்த இருவரும் அச்சுவேலி வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றபோதும் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றவர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

மற்றைய நபர் அச்சுவேலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60,104)

## கிருமித்...

உயிரிழந்தவராவார்.

குறித்த மாணவிக்குக் காய்ச்சல் ஏற்பட்ட நிலையில் கடந்த மாதம் 5ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்ப்பித்துள்ளனர். வைத்தியசாலையில் சேர்ப்பித்து சில தினங்களில் குறித்த மாணவி மயக்க நிலையை அடைந்துள்ளார்.

தொடர்ச்சியாக மயக்க நிலையில் இருந்து வந்த நிலையில் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

கிருமித் தொற்றுக் காரணமாக மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்றுப் பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது. (ம-7,60,104)

## யாழ்.புல்லுக்...

நேற்று மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் யார் என இதுவரை அடையாளம் காணப்படவில்லை. அவர் வெள்ளை, சிவப்பு மற்றும் கறுப்பு ஆகிய வர்ணங்களிலான பெட்டி போட்ட சட்டையை அணிந்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் அவரது துவிச்சக்கர வண்டி குளத்திற்கு வெளியே காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சடலம் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் சடலத்தை இனங்காட்டுமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பிலான மரண விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-7,60,104)

## வடக்கு...

கீழ் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நாட்டில் இலஞ்ச, ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராகச் சட்டம் தனது கடமையைச் செய்ய ஆரம்பித்துள்ளது.

இந்நிலையில் இதில் இருந்து தப்பித்துக்கொள்ளும் நோக்கிலேயே சில எதிரணி உறுப்பினர்கள் அரசை விமர்சிக்கத் தொடங்கியுள்ளனர்.

இலங்கையில் வறுமையால் அதிகளவு பாதிக்கப்பட்ட மாகாணமாக வடக்கு மாகாணம் மாறியுள்ளது. இந்த மாகாணத்தை நாம் நிச்சயம் கட்டியெழுப்ப வேண்டும். கடந்த காலங்களில் ஆட்சியில் இருந்த அனைத்து அரசுகளும் வடக்கை நோக்கியே அனைத்து அநீதிகளையும் கட்டவிழ்த்துவிட்டன.

வன்முறைகள் தலைவிரித்தாடின. இறுதியில் அது யுத்தமாக மாறியது. மக்கள் கொல்லப்பட்டனர். சொத்து இழப்புகள் ஏற்பட்டன. போர் முடிவடைந்தும் வடக்கு மாகாணம் கட்டியெழுப்பப்படவில்லை. எனினும், எமது ஆட்சியின் கீழ் வடக்கை நோக்கி அனைத்துச் செயற்பாடுகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன்மூலம் வடக்கு மாகாணம் நிச்சயம் கட்டியெழுப்படும் என்றார். (ம-7)

## வட மாகாணத்தில்..

யாளம் காணப்பட்ட திட்டங்கள் மற்றும் எதிர்காலத்தில் உள்ளடக்கப்படவேண்டிய திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை மதியம் நடைபெற்றது.

கடற்றொழில் நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் ஆகியோரின் பங்கேற்புடன் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

உலக வங்கியால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பில் கடந்த ஜூன் மாதம் 29 ஆம் திகதி நடைபெற்ற கலந்துரையாடலின் தொடர்ச்சியாக நேற்று குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

உலக வங்கியால் முதல் கட்டத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ள திட்டங்கள், அதன் தயார் நிலைமை என்பன தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது. அத்துடன் புதிதாக எத்தகைய திட்டங்களை உள்ளடக்க வேண்டும் என்பது தொடர்பிலும் அதற்கான சாத்தியப் பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. அத்துடன் சில திட்டங்களுடன் தொடர்புடைய திணைக்களங்களுடன் ஆராய்ந்து அதன் முடிவுகளின் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது. (ம-7)

## ரூ.14,...

மிளகாய், சோயா மற்றும் உருளைக் கிழங்கு பயிர்களுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கு 1,484 மில்லியன் ரூபாய் இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளதாக கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை அறிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில் 87,690 ஏக்கர் நிலத்தில் மேற்படி பயிர்களை சாகுபடி செய்த 74,958 விவசாயிகளுக்கு இந்த இழப்பீடு வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வறட்சி, வெள்ளம் மற்றும் வன விலங்குகளால் ஏற்படும் சேதங்களுக்கு, ஹெக்டேயருக்கு அதிகபட்சமாக 100,000 ரூபாய் வரை இழப்பீடு வழங்கப்படுவதாகவும் சபை குறிப்பிட்டுள்ளது.

இலவச பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் இந்த இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதாகவும், இது விவசாயிகளை அதிகமாக பயிரிட ஊக்குவிக்கும் நோக்கம் கொண்டது என்றும் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை தெரிவித்துள்ளது. (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127












































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

மேசன் - Rs. 3000.00-3500.00
மேசன் உதவியாளர் - Rs 2500.00 - 2800.00
வெல்டர் (அனுபவமுள்ளவர்கள்) - Rs 3000.00
வயறிங் வேலை(அனுபவமுள்ளவர்கள்) - Rs. 3000.00
பிளமிங் வேலை(அனுபவமுள்ளவர்கள்) - Rs. 3000.00
தச்சு வேலை(அனுபவமுள்ளவர்கள்) - Rs 3000.00

தினசரி சம்பளம் வழங்கப்படும்.
(தேவைப்படின் தங்குமிடம், உணவு ஒழுங்கு செய்து தரப்படும்.)

(1423)

**074 112 9148**
(காலை 8.00 - மாலை 5.30 வரை.)
யாழ்ப்பாணம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி **இஸ்வேதா டர்ஷினி ஹென்றி**
SLTES III
(Spl.Trained in Science, BEd Science, MEd)

கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் உதவி அதிபராகப் பணியாற்றி பதவியுயர்வு பெற்று ஆசிரிய கல்வியியலாளர் சேவையில் வவுனியா கல்வியியற் கல்லூரியில் ஆசிரிய கல்வியியலாளராக இணைந்துள்ள திருமதி இ.டஹென்றி அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல உயர்வுகள் பெற வாழ்த்துகின்றோம்.

(4999) ஆசிரிய நண்பர்கள்

## வேலைவாய்ப்பு

கொழும்பில் இயங்கும் பிரபலநிறுவனம் ஒன்றிற்கு அனுபவமுள்ள கணக்காளர் வேலைக்கு ஆள் தேவை. (இருபாலாரும்) 09.08.2025 இன்று மாலை 3-4 மணிக்குள் யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவில் இல.81, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு நேரில் வரவும்.
குறிப்பு : ஆண் ஆயின் தங்குமிட வசதியுண்டு.

(C-3605)

**021 222 2772**

## மாப்பிள்ளை தேவை

01. சுழிபுரம், இந்து, 1997, சித்திரை, MBBS, MD, MBA, Doctor பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 38047
02. கோண்டாவில், இந்து, 1994, அவிட்டம், Grauated பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 53069
03. காரைநகர், இந்து, 1997, ஆயிலியம், Software Engineer (Uwa wellassa University) பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 52973
04. வேலணை, இந்து, 1983, MBBS, Doctor, UK Citizen, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 53687
05. கச்சேரி, இந்து, 1979, பூராடம், UK Grauated, UKCitizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 50933
06. கந்தரமடம், இந்து, 1989, ஆயிலியம், BSc, UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 32157
07. தெல்லிப்பழை, இந்து, 1989, உத்திராடம், Optometrist, Divorce, UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 30571
08. உடுப்பிட்டி, இந்து, 1994, கேட்டை, MSc, Mecanical Engineer, UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 31484
09. புன்னாலைக்கட்டுவன், இந்து, 1990, புனர்பூசம், Bussiness and Finance UK degree, UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 37878
10. கோப்பாய், இந்து, 1997, அஸ்வினி, MSc, Biomedical Junior Scientist, UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 35467

(C-3339)

எம்மிடம் எல்லா நாட்டிலும், எல்லா ஜாதியிலும் Unmarried, Divorce மாப்பிள்ளைகளும் மணப்பெண்களும் உண்டு.

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728
(5002)

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
**076 636 3378,**
**076 097 3127**

## தேவை

- சாரதி தேவை (AD)
- மேற்பார்வையாளர் (ஆண்,பெண்)
- பொதியிடல் (பெண்)

(1422)

**076 440 0816**

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-3606)

## கனடா - வரி இல்லாமல்

விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3710/-
11-16 Kg 2660/-
21-27 Kg 2480/-

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

(C-3606)

UK 11Kg - 1420/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2480/- | Australia 11Kg - 2150/- | Italy 11Kg - 2270/-

எமது நேரடி கிளைகள்
கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் இராச பாதை வீதியில் 16 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

நிலப்பரப்பு

- பிரதான இராச பாதை வீதியில் இருந்து 2ஆவது காணி 50 Mதூரத்தில் உள்ளது.
- 20 அடி பாதையுடன்.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்டநிலையில் உள்ளது.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்றுச் சூழல்.
- இக்காணியில் இருந்து திருநெல்வேலி பிரதான சந்தை கல்வியங்காடு பிரதான சந்தை 1½ km தூரம்.
- நல்லூர் ஆலயம் 2 km தூரம்.
- ஒரு பரப்பின் விலை 69 லட்சம்

(5001)

பார்வையிடும் நேரம்
காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு: ஜெயம்
**077 814 7389,**
**077 986 5457**

## உடனடி வேலைவாய்ப்பு

வடமராட்சியில் நன்மதிப்பைப் பெற்ற பிரபல்யமான, பல கிளைகளைக் கொண்ட வெதுப்பக உற்பத்தி நிறுவனத்திற்கு கீழ் காணும் வேலைவாய்ப்பிற்கான வெற்றிடம் காணப்படுகின்றது.
- கிளை முகாமையாளர் (Branch Manager) - 2

மேற்குறிப்பிட்ட வேலைக்கு அனுபவம் உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.
(குறிப்பு: இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.)

(4996)

தொடர்புகளுக்கு : **077 269 0764**

## வாடகைக்கு

இரண்டு மாடிக் கடை வாடகைக்கு விடப்படும்
இடம் : தபால் நிலைய வீதி , சாவகச்சேரி.
தொடர்புகளுக்கு
(4988)
**077 565 9990 / 0047 9320 2986**

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 208/= | Max 3Kg |
| 1Kg Prima கோதுமை மா | - 158/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 240/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 350/= | |
| 1Kg நவை | - 285/= | |
| 1Kg சம்பா அரிசி | - 230/= | |
| 1Kg வெள்ளைப் பச்சை | - 188/= | Max 3Kg |
| 1Kg தீட்டல்ப்பச்சை | - 239/= | |
| 10Kg விஜிதா நாடு | - 2850/= | |
| 1Kg ஈக்குத்தீட்டல் | - 185/= | |
| 1Kg கீரிச்சம்பா | - 255/= | |
| 1Kg சிவப்பு கௌப்பி | - 1100/= | |
| 1Kg கடலை | - 384/= | |
| 1Kg சோயா | - 330/= | |
| அங்கர் யோக்கட் | - 45/= | ~~70/=~~ |

உங்கள் Happy Super Markert முன்றலில் இடம்பெறவுள்ள Maliban Kiri பால்மா Promotion இல் கலந்து மலிபன் பால்மா இனை கொள்வனவு செய்வதன் மூலம் Coolie (கூலி) திரைப்படத்திற்கான ரிக்கற் இனை குலுக்கல் முறையில் வெல்லும் வாய்ப்பினையும் பெற்றிடுங்கள்

இன்று 09.08.2025 காலை 9 am மாலை 6 pm வரை

1150



~~1200~~

அத்துடன் ஒரு கோப்பை Maliban Kiri பாலினை இலவசமாகச் சுவைத்திடுங்கள்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி.
077 2080 30
(1424)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org